Free Circulation Germany- England
மணி: 74 - ஓசை: 335 ஆவணி. August. 2024

# வெற்றிமணி
Vettimaniy

ESTD 1950
30TH years IN EUROPE Successful Publishing
பிரதம ஆசிரியர் கலாநிதி மு.க.சு.சிவகுமாரன்.B.F.A




# இலங்கை அரசியலை குழப்பும் '22'

இலங்கையில் இருந்து ஆர்.பாரதி

**"நான் ஒரே நேரத்தில் பல வேலைகளை செய்வேன்" நீங்கள் அப்படியா? வாசியுங்கள்!**



## கதலி என் காதலி



## தாயகத்தில் நடைபெற்ற வெற்றிமணியின் வெற்றி நிலா முற்றம்

(வெற்றிமணி 30 வது ஆண்டு நிறைவு விழா)

**இதழ்: 335**






# கதலி வாழைப்பழம் காதலிக்க யாரும் இல்லை

தாய்மண்ணில் 1970 களில் வாழைப்பழம் என்றால் கதலி வாழைப்பழம் என்றுதான் வாங்குவோம். வாழைப்பழம் என்றாலே கதலிதான்.

விடுகளில் திருமணம் என்றால் வாசலிலில் இரு மருங்கிலும் பெரிய கதலிக்குலை கட்டுவார்கள். பழுத்த பழம் மஞ்சளாக இருக்கும்.

இப்பவும் இந்த வாழை கட்டும் கலாச்சாரம் வீடுகளிலும், ஆலயங்களிலும், கடைகள் திறப்பு விழாக்களிலும் தாயகத்தில் காணலாம்.

09.07.2024 வட்டுக்கோட்டை யில் ஒரு ஆலயத்தில், இருமருங்கிலும் பெரும் கதலி வாழைக்குலை கட்டப்பட்டு இருந்தது. மருந்து அடிக்காத இயற்கையாக வளர்ந்து காய்த்த வாழைக்குலை.

ஆலயத்தில் இடைப்பழம் பழுத்து அழகாக இருந்தது.

மறு நாள் அரைக்குலை பழுத்து இருந்தது. நான் அன்னதானத்திற்கு வாழைப்பழம் கொடுக்கலாம் என்றேன்.

கதலியா இங்கு ஒருவரும் சாப்பிட மாட்டிடம் என்றார்கள். வேண்டும் என்றால் எவ்வளவு வேண்டும் என்றாலும் பிடுங்ககுங்கள் என்றனர். நான் ஆசையில் 20 பழம் பிடுங்கிகொண்டு வீடு சென்று நல்ல பழம் கோயிலில் பிடுங்கியது பிட்டோடு சாப்பிடலாம் என்றேன்.

வீட்டுக்காரர் ஐயோ விரும்பினால் நீங்கள் சாப்பிடுங்கோ . மிச்சத்தை எறியுங்கோ. ஆனால் ஆடு சாப்பிடாமல் பொலித்தீனில் கட்டி தூரத்தில் எறியுங்கோ என்றனர்.

(காலை காற்றில் வந்த ஒரு பொலித்தீன் பையை ஆடு சாப்பிட்டு ஏப்பம் விட்டது வேறு கதை)

மறுநாள் ஆலயத்திற்கு சென்றேன் ஆலய மதிலோடு நேற்று நான் பிடுங்கிய குலையில் பாதி அனாதரவாக இருந்தது.

தம்பி வாழைப்பழம் வேண்டுமோ என்றேன்.

எனக்கு உது வேண்டாம் என்று காலில் நெருப்பு பட்டது போல் கதலியைக்கண்டு ஓடினான்.

நான் இன்னும் அப்டேட் ஆகாத அந்தக்காலத்து சிறுவனாகவே அந்த மூலையில் கிடந்த கதலியை , காதலிக்க ஆரம்பித்துவிட்டேன்.

ஒரு மணித்தியாலத்திற்கு 2 என்ற வீதம் ஆலயத்தில் நின்ற நேரம் முழுவதும் ஒரே காதல் தான்.



● மாதவி


காலை மனைவி சுகர் எவ்வளவு என்று பார்க்கச் சொன்னா. 7 காட்டியது. வழமையாக 8.6 காட்டும் யேர்மனியில். இங்கு எகிறவில்லை.

எனக்கு 7 என்றால் அது சரியான நோமல் மாதிரி.

நாளை காலை ஆலயம் போவேன் என் காதலியை தேடி.



வெற்றிமணி
தமிழ் எங்கள் உயிருக்கு மேல்
ஓசை : 335



ஆரம்பம்: 1950
ஸ்தாபகர்
அமரர் மு.க.சுப்பிரமணியம்
( முன்னாள் அதிபர்: குரும்பசிட்டி பொன். பரமானந்தர் வித்தியாலயம்)

பிரதம ஆசிரியர்
'ஓவியக்கலைவேள்'
கலாநிதி
மு.க.சு.சிவகுமாரன்
Chief Editor:
Dr.M.K.S.Sivakumaran B.F.A

Tel: +49 01631992333
+49 01631992333

e-mail: vettimaniy@hotmail.com

"வெற்றிமணிமொழி"
தோல்வியைக் கண்டு அஞ்சுபவர்களிடமிருந்து வெற்றி தானாகவே விலகிச்செல்கிறது

Vettimaniy Ltd
Company No: 8876276

# இலங்கை அரசியலை குழப்பும் '22'



இலங்கையிலிருந்து
ஆர்.பாரதி

அரசியலமைப்புக்கான 22 ஆவது திருத்தம் வர்த்தமானியில் வெளியிடப்பட்டிருப்பது கொழும்பு அரசியலில் மீண்டும் ஒரு குழப்பத்தை ஏற்படுத்தியிருக்கின்றது. ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க குழப்பம் ஒன்றை ஏற்படுத்த வேண்டும் எனத் திட்டமிட்டே இதனை வெளியிட்டாரா, அல்லது உண்மையிலேயே தேர்தலை ஒத்திவைக்க அவர் திட்டமிடுகின்றாரா என்ற கேள்வி எதிரணியை மட்டுமல்ல ஆளும் கட்சியையும் குழப்புகின்றது!

அரசியலமைப்புக்கான 22 ஆவது திருத்தச் சட்டமூலத்துக்கான வர்த்தமானி ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் உத்தரவின்படி வெளியிடப்பட்டது. 22 குறித்த வா்த்தமானி வெளியிடப்படாது என நீதி அமைச்சர் விஜயதாச ராஜபக்ஷ அறிவித்திருந்தார். மற்றொரு அமைச்சராக மகிந்த அமரவீர 22 நாடாளுமன்றத்துக்கு வரப் போவதில்லை என்று அறிவித்திருந்தார். ஆனால், எதிர்க்கட்சிகள் எவையும் எதிர்பார்க்காத நேரத்தில் இந்த வர்த்தமானி வெளிவந்திருப்பது எதிர்க் கட்சிகளுக்கும் மனித உரிமைகள் அமைப்புக்களுக்கும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.




அரசியலமைப்பில் சர்ச்சைக்குரியதாக இருக்கின்ற 83 (ஆ) பிரிவை மாற்றுவதற்காகத்தான் இப்போது அரசியலமைப்புக்கான 22 ஆவது திருத்தம் பிரேரிக்கப்பட்டுள்ளது. ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவும், நீதி அமைச்சர் விஜயதாச ராஜபக்ஷவும் இணைந்து இந்தத் திருத்தத்தைத் தயாரித்ததாகச் சொல்லப்படுகின்றது. இது அமைச்சரவையின் அங்கீகாரத்தை பெற்றிருந்தாலும் கூட, தற்போதைய நிலையில் இதனை வர்த்தமானியில் வெளியிடுவதில்லை என்றுதான் அரசாங்கத் தரப்பு வட்டாரங்கள் தெரிவித்திருந்தன.

ஜனாதிபதியின் பதவிக்காலத்தை ஆறு ஆண்டுகளிலிருந்து ஐந்து ஆண்டுகளாகக் குறைக்கும் 19 ஆவது திருத்தம் 2015 இல் கொண்டுவரப்பட்ட போது, இந்தப் பிரிவும் அரசியலமைப்பு நிபுணர்களின் கவனத்தைப் பெற்றிருந்தது. ஜனாதிபதியின் பதவிக்காலத்தை ஆறு ஆண்டுகளிலிருந்து ஏழு வருடங்களுக்கு நீடிப்பதாயின் நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் சர்வஜன வாக்கெடுப்பும் அவசியம் என இதில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இதனைத் திருத்த முற்பட்டால், அதற்கு சர்வஜன வாக்கெடுப்பின் மூலமாக மக்களின் அனுமதி பெறப்பட வேண்டும் என்பதால் அப்போது அது அப்படியே விடப்பட்டது.

19 ஆவது திருத்தத்தை வெறுமனே நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் மட்டும் நிறைவேற்றி முடிப்பது என்ற எண்ணம் இருந்தமையால் இந்தப் பிரிவில் கை வைக்காமல் அதனை அப்படியே விட்டுவிடுவதற்கு மைத்திரி – ரணில் அரசு தீர்மானித்தது. அதனால் எந்தவிதமான குழப்பங்களும் ஏற்படாது என்ற அரசியலமைப்பு நிபுணர்களின் கருத்தும் இந்தத் தீர்மானத்துக்குக் காரணமாக இருந்தது.

ஜனாதிபதித் தேர்தலை ஒத்திவைப்பதற்கு ரணில் விக்கிரமசிங்க இதனைப் பயன்படுத்தலாம் என்ற கருத்துக்களின் அடிப்படையில்தான் இரு மாதங்களுக்கு முன்னதாக 19 ஆவது திருத்தச் சட்டமும், 83 (ஆ) பிரிவும் மீண்டும் ஆய்வுக்கு உள்ளாக்கப்பட்டன. மைத்திரிபால சிறிசேன தன்னுடைய பதவிக்கால இறுதியில் இந்த சர்ச்சையைப் பயன்படுத்தி தனது பதவிக்காலத்தை ஆறு வருடங்களாக நீடிப்பதற்கான முயற்சி ஒன்றை 2019 இல் மேற்கொண்டார்.

19 ஆவது திருத்தத்தின் அடிப்படையில் அவர் தனது பதவிக் காலத்தை நீடிக்க முடியாது என்று உயர் நீதிமன்றம் அப்போது தனது வியாக்கியானத்தில் தெரிவித்திருந்தது. தற்போதும், 19 ஆவது திருத்த்தில் உள்ள குறைபாடுகளையும், 83 (ஆ) பிரிவையும் சுட்டிக்காட்டி ஜனாதிபதியின் பதவிக்காலம் தொடர்பில் இரண்டு மனுக்கள் உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டன. ஆனால், இரண்டு மனுக்களுமே நிராகரிக்கப்பட்டன. ஜனாதிபதியின் பதவிக்காலம் 5 வருடங்கள்தான் என்பது உயர் நீதிமன்றம் மீண்டும் உறுதியாகத் தெரிவித்துவிட்டது.

அதாவது, 83 (ஆ) பிரிவை மாற்றியமைப்பதற்காக மற்றொரு அரசியலமைப்புத் திருத்தத்தைக் கொண்டுவர வேண்டிய எந்த அவசரமோ – அவசியமோ இப்போதைக்கு இல்லை. ஜனாதிபதித் தேர்தலை அறிவிப்பதற்கான அதிகாரம் தேர்தல் ஆணைக்குழுவுக்குக் கிடைத்துள்ளது. 83 (ஆ) பிரிவை மாற்ற வேண்டிய அவசியம் எதுவும் உருவாகவும் இல்லை.

22 ஆம் பக்கம் பார்க்க...




INNENSTADT WEST
தமிழர் அரங்கம்
ortel MOBILE
DORTMUND
தமிழர் தெருவிழா
Straßenfest der Tamilen 2024
06.09.2024
FR. 16:00 - 00:00
07.09.2024
SA. 11:00 - 00:00
08.09.2024
So. 12:00 - 19:00
3 நாட்கள்
வெள்ளி - சனி - ஞாயிறு
Dortmunder U - Park der Partnerstädte
Gemeinsam in Vielfalt
Der Integrationsrat
Stadtteil-Schule
VKII RUHRBEZIRK e.V.
SIVAN DIGITAL
TKD
VMDO
வெற்றிமணி
அகரம்
தமிழ் ரைம்ஸ் TAMIL TIMES
IBC தமிழ்
Lankasri
ETR
PAARPOM
எம்தமிழ்
tamil nrw
0151633 633 33 | 0157 370 50 110 | 176 246 371 75 | 0151 279 909 90



# 500 ரூபாவும், அங்கர் மாவும்

யாழ்பாணம் கடை வீதியில் வெளிநாட்டில் இருந்து வருவோரை இலக்குவைக்கும். மனிதன்.

தன்னிடம் 500 ரூபாய் உண்டு. தனக்கு ஒரு வகை நோய். எனக்கு ஒரு அங்கர் மா வேண்டித்தரவும்.

பார்ப்பவர்கள் 500 ரூபாய் வைத்திருக்கிறார் என்று கதைக்க முயன்றால் அவ்வளவுதான்.

3 நாட்களாக காட்சி மாறி ஒரே நாடகம் அரங்கேறுகிறது.

இன்னும் ஒன்று 10 கிலோ அரசி வாங்கி தாங்கள். நான் பிச்சை எடுப்பதே இல்லை. இதுதான் முதல் முறை எனக்கு 10 கி. லோ அரிசி. வாங்கித்தாங்கோ.

சும்மா உதவினால் 300 ரூபா அல்லது 500 ரூபாய் கொடுப்பார்கள். அட பொருள்தானே கேட்கிறார்கள் என்று மனம் இரங்கி போனால் 5.கி.லோ அரிசி 1.100ரூபாய்.

அதனை வாங்கிகொடுத்தால் எதிர் கடையில் வைத்து விட்டு செல்கிறார். தான் ஒரு முன்னாள் என்று வேறு சொல்கிறார்.அதனைக்கேட்டதும் அவர் மீது ஒரு வித பார்வை விழும், இது போதும்.

அவர் இப்படி பலரிடம் அரிசி வேண்டி உள்ளார். வேடிக்கை என்ன வென்றால் அரிசி விற்பவர் உதவி செய்பவருக்கு இவர் இப்படி பல தடவை அரிசி வாங்கினார் என்று சொல்வது இல்லை. அவருக்கும் வியாபாரம்.




இன்னும் ஒருவர் 500 ரூபாய் காசு. கேட்டு ஓட்டோவை நகரவிடாமல் ஓட்டோ சில்லுக்குள் கால்வைத்து அரக்காமல் நிற்கிறார்.

புலம் பெயர்ந்த தமிழர்கள் தமக்கு கட்டாயம் தரவேண்டும் என்ற மனநிலை மேலோங்கி உள்ளதை காணமுடிகிறது.

பலருக்கு தேடி தேடி உதபுபவர்களும், இக்கட்டான நிலைக்கு தள்ளப்படுவதைக்காணலாம்.

யாழ்ப்பாணத்தில் இளநீர் சறத்துடன் சென்று வாங்கினால் 150 ரூபாய் அரைக்காச்சட்டை யுடன் என்றால் 250 ரூபாய். 300 ரூபாய்.

பேரூந்து நிலையத்தை சுற்றி உள்ள கடைகளில், தெருக்களில், கனடா, சுவிஸ், இங்கிலாந்து, யேர்மனி நாட்டவர்கள் அதிகமாக உலாவருகின்றனர்.

ஐயா நல்லூர் எந்தக் கோபுரவாசல் தம்பி என்னை றீயோ ஐஸ்கிபீம் வாசலில் இறக்கிவிடவும்.

பேருந்தில் நல்லூர் சென்றேன், நடத்துனர் எந்தக் கோபுர வாசல் என்ற கேட்டார் பாதிப்பேர் றியோ ஐஸ்கிபீம் வாசல் என்றனர். தப்பேதும் இல்லை உண்மையைச் சொன்னாத்தானே சரியான இடத்தில் இறங்கலாம்.

---

# காதலிக்க நேரம் இல்லை காஞ்சனா

**காதலிக்க நேரமில்லை,**
**காதலிப்பார் யாருமில்லை**
**வாலிபத்தில் காதலிக்க ஜாதகத்தில்**
**வழியுமில்லை.**
**என்ற பாடல் வரிகளால்**
**வாலிபரகள் உள்ளத்தைக்**
**கவர்ந்த நடிகை காஞ்சனா**
**அவர்களின் சொந்தக்**
**கதையே ஒரு சோகக் கதை போல**
**ஆனதில் பலருக்கும் வருத்தமே.**



என் குடும்பம் நல்ல வாழ்ந்த குடும்பம் தான். ஆனால், அப்பாவின் தொழில் நஷ்டத்தால் ஏற்பட்ட அதிகமான கடன் சுமைகளும் பாரங்களும் என்மேல் விழுந்தன. கல்லூரியில் படித்துக்கொண்டிருக்கும்போதே, இண்டியன் ஏர்லைன்ஸில் ஏர்ஹோஸ்டஸ் பணியில் இருந்தேன். அப்போதுதான் சினிமா வாய்ப்புகளும் தேடிவர, புகழுடன் நிறைவான பணமும் சம்பாதித்தேன். எல்லாக் கடன்களையும் அடைத்தேன்.

பெரிய இடங்கள் பலவற்றிலிருந்தும் என்னைத் திருமணம் செய்துகொள்ள முன்வந்தார்கள். ஆனால், சொந்த உறவுகளுக்குள் இருந்த சிலரே அதையெல்லாம் தடுத்தார்கள். என் சினிமா வருமானம் மட்டுமே அவர்களுக்கு முக்கியமாக இருந்தது.

30 ஆம் பக்கம் பார்க்க...





Luckyfly
SUMMER
OFFER
ஸ்ரீலங்கா சென்றுவர
குறைந்த விலையில் மகிழ்ச்சியாக
செல்ல...
நீங்கள் விரும்பிய
நாட்களில் சுற்றுலா செல்ல
டிக்கெட் வசதி
செய்து தருகிறோம்...
இன்றே அழையுங்கள்!
BOOK ON CALL
info@lucky-fly.de
www.lucky-fly.de
0234 2399032
0179 14 84892



# ஒரே நேரத்தில் பல வேலைகள், செய்வீர்களா?

## அப்போ படியுங்கள்!

ஒரே நேரத்தில் பல வேலைகளை செய்து முடிக்கும் திறமையைத் தான் இந்த உலகம் “Multi tasking “ என சொல்கிறது . அதிலும் இது ஒரு கலை என்றும் இந்த மல்டி டாஸ்கிங் கலையில் பெண்களே கைதேர்ந்தவர்கள் என்றும்கூட காலங்காலமாக சொல்லப்பட்டுவருவதும் உண்டு. உண்மையில் பெண்களது வேலைப்பளுவில் பங்கெடுத்துக் கொள்ள அவளுக்கு போதிய அனுசரணை இல்லாத காலகட்டத்திலிருந்து அவள் அவளுக்கென ஒதுக்கப்பட்ட அத்தனை வேலைகளையும் குறிப்பிட்ட நேரத்திற்குள் முடித்துவிடவேண்டும் என்கிற அழுத்தத்தினாலேயே இந்த அரடவை வயளமபைெ என்கிற ஒன்றுக்குள் அகப்பட்டுக்கொண்டிருக்கவேண்டும். ஆனால் ஆண்களை பொறுத்தவரையில் அவர்களது சிங்கிள் டாஸ்கிற்கே உதவிக்கு பலர் இருந்த காரணத்தினால் மல்டி டாஸ்கிங் செய்து அவஸ்தைப்படும் தேவை இருக்கவில்லையோ என்னவோ ! ஒரே நேரத்தில் பல வேலைகளை செய்வதற்கு “நேரமின்மை“ மட்டுமல்ல காரணம் , உண்மையில் ஒரு நேரத்தில் ஒரு வேலையை மட்டும் செய்துகொண்டிருப்பது ஒருவிதமான திறமைக் குறைவாகவும் இன்றெல்லாம் கருதப்படுகின்றது என்பதும்தான் காரணம் . ஆனால் இந்த திறன் உண்மையிலேயே சரியானதுதானா என்கிற கேள்விக்கு, பல ஆய்வாளர்கள் இல்லை என்கிற பதிலையே முன்மொழிகின்றனராம் .



பிரியா இராமநாதன்
(இலங்கை)

“நான் ஒரே நேரத்தில் பல வேலைகளை செய்வேன்“ என்று பெருமையாக பலரும் மல்டி டாஸ்கிங் செய்வது பற்றி கூறுவதுண்டு. ஆனால் அவசியமான, அவசரமான நேரத்தில் மல்டி டாஸ்கிங் செய்வதில் பிரச்சினையில்லை . ஆனால் எப்பொழுதுமே மல்டி டாஸ்கிங் செய்து கொண்டேயிருப்பது என்பது பிரச்சினைக்குரிய ஒன்றுதான. இதனால் எந்த வேலையும் அவர்களால் முழுமையாக கச்சிதமாக செய்ய முடியாமல் போகும் நிலை ஏற்படும். அதுமட்டுமல்லாமல் நாள் முழுவதும் பதட்டமாகவும் படபடப்பாகவும் இருக்கும் சாத்தியமும் இருக்கும் என்று ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.



சில நேரங்களில் மல்டி டாஸ்கிங்கால் நேரத்தை மிச்சப்படுத்தலாம் என நாம் நினைத்துக்கொண்டிருந்தாலும், நம்முடைய முழு கவனத்தினையும் குறித்த வேலைகளில் ஈடுபடுத்த இயலாமல் போவதால் காலதாமதம் ஏற்படும் நிலை உருவாகும் என்பதோடு கவன சிதறல்கள் , மனப்பதற்றம் போன்ற சிக்கல்கள் ஏற்படும் வாய்ப்புக்களும் உண்டாகலாம. அதுமட்டுமன்றி ஒரே நேரத்தில் பல வேலைகளில் மூழ்கியிருப்பவர்கள் தங்கள் கண்முன்னே நிகழும் பல விடயங்களை கண்ணுறும்போதும் அவை அவர்களது மூளையில் பதிவதில்லையாம். அதுமட்டுமன்றி நம்முடைய நினைவுத் திறனில் பாதிப்பினை ஏற்படுத்தி முக்கியமான விடயங்களை நினைவில் நிறுத்திக்கொள்ள இயலாமல் செய்துவிடும் என்றும் , படைப்பாற்றலை குறைத்துவிடும் என்றும் ஆய்வுகள் கூறுகின்றனவாம் .

ஒரு வேலையின் மீதான கவனம் சட்டென்று மற்றொன்றுக்கு மாறுவதும், அடுத்து இன்னொன்றுக்கு மாறுவதும் என அடுத்தடுத்து நிகழும்போது நம்முடைய கவனம் சிதறி, ஏதேனும் ஒன்றையாவது முனைப்புடன் செய்ய நமது மூளை திணறி “mental block“ ஏற்பட்டு பணித்திறன் குறைகிறது. ஒன்றை கற்றுக் கொள்ளும் திறமை, பிரச்சினைகளை அடையாளம் காண்பது, அதற்குத் தீர்வு காண்பது உள்ளிட்ட ஒட்டுமொத்த அறிவாற்றல் திறனையும் இது பாதிக்கிறது என்பதுதான் யதார்த்தம் .

மல்டி டாஸ்க் பணியில் நிரந்தரமாக ஈடுபடுபவர்களின் மூளை எளிதாக சோர்ந்துவிடும் என்பதற்கு இந்த கட்டுரையை எழுதிக்கொண்டிருக்கும் நானும் கூட ஓர் சாட்சிதான். நமது மூளை சோர்ந்து போகும்போது உற்சாகம் குறையும். ஞாபகமறதியும் தோன்றும். எல்லாவற்றையும் இழுத்துப்போட்டுக்கொண்டு செய்து முடித்து, நாம் நமது மனதையும், உடலையும் அழுத்தத்திற்கு உள்ளாக்குவதைவிட, செய்கிற வேலையை ரசித்து செய்து உடலையும் மனதையும் நலமாக வைத்துக்கொள்வது முக்கியம் அல்லவா? உழைப்பு எவ்வளவு அவசியமோ அது போல் ஓய்வும் மிக அவசியம். தங்களால் இயன்ற வேலையை அளவுடன் செய்துவிட்டு மூளைக்கும், உடலுக்கும் ஓய்வளிக்க வேண்டியது அவசியம். அமைதியான மனநிலையில்தான் மூளை புதுமைகளைப் பற்றி சிந்திக்கும். அவசரத்திலும் பதட்டத்தில் நமது மூளை எந்த புதுமையையும் சிந்திக்கப்போவதில்லை!






விளம்பரம் அறிமுகம் செய்யும். தரம் அதை நிலைபெறச் செய்யும்.



நேர்காணல்

# ஐரோப்பாவில் 30 வருடங்களைக் கடந்து ஒலிக்கும் ஒரே பத்திரிகை வெற்றிமணி



யாழ்ப்பாணம், குரும்பச்சிட்டியைச் சேர்ந்த மறைந்த ஆசிரியர் மு.க. சுப்ரமணியத்தினால் 1950 இல் சிறுவர் சஞ்சிகையாக ஆரம்பிக்கப்பட்ட 'வெற்றிமணி', 1980 இல் அவரது மறைவோடு நின்று போனது. என்றாலும் அவரது மகனான மு.க.சு. சிவகுமானின் முயற்சியினால் நின்று போயிருந்த வெற்றிமணி, 1994 ஜுன் முதல் ஒரு ஜனரஞ்சக பத்திரிகையாக ஜேர்மனியில் இருந்து வெளிவருகிறது. இப்பத்திரிகையின் ஆசிரியர் சிவகுமாரன் இலங்கைக்கு அண்மையில் விஜயம் செய்திருந்த சமயம் வெற்றிமணியின் 30 வருட நிறைவு குறித்து தினகரன் வார மஞ்சரிக்கென விஷேட பேட்டியொன்றை வழங்கினார். அப்பேட்டியை இங்கு தருகிறோம்.

**கேள்வி: உங்களது எழுத்துலகப் பிரவேசம் குறித்து சுருக்கமாகக் கூறுங்கள்?**

**பதில்:** நான் குரும்பச்சிட்டியைப் பிறப்பிடமாகக் கொண்டவன். அது இயல்பாகவே தமிழ்வாசனை மிக்க மண். அத்தோடு எனது தந்தை ஒரு ஆசிரியராவார். அவர் நாவலப்பிட்டியில் ஆசிரியராகக் கடமையாற்றிய போது மாணவர்களை மையப்படுத்தி வெற்றிமணி என்ற பெயரில் சிறுவர் சஞ்சிகையொன்றை ஆரம்பித்து நடாத்தி வந்தார். அச்சஞ்சிகைக்கு எனது சிறுபராயம் முதல் பங்களிப்பு செய்தேன். இதன் ஊடாக எழுத்துலக பிரவேசம் குறித்த ஆர்வமும் ஊக்கமும் எனக்கு கிடைக்கப்பெற்றது.

இவ்வாறான பின்புலத்தில் நான் எழுதிய 'காலம் கடந்த கண்ணீர்' என்ற தலைப்பிலான முதலாவது சிறுகதை 1970 இல் தினகரனில் வெளியானது. அச்சிறுகதைக்கு தினகரன் நிறுவனத்தினர் 20 ரூபாவை கொடுப்பனவாக அனுப்பி வைத்திருந்தார்கள். அன்றைய காலகட்டத்தில் எனது சிறுகதை தினகரனில் பிரசுரமானதை எனது சிறுகதைக்கு கிடைத்த அங்கீகாரமாகவே கருதினேன். அதன் பின்னர் நான் எழுதிய பல சிறுகதைகள் தினகரனில் தொடராக வெளிவந்துள்ளன. அவற்றையும் வெற்றிமணியில் வெளிவந்த ஒரு குறுநாவலையும் தொகுத்து 'ஒரே ஒரு தெய்வம்' என்ற பெயரில் சிறுகதைத் தொகுதியாக எனது 19 வது வயதில் வெளியிட்டேன். அவற்றில் பெரும்பாலானவை தினகரனில் வெளிவந்த சிறுகதைகளாகும்.

மேலும் 1990 இல் சித்திர சிற்ப கண்காட்சி சிறப்பு மலரான 'புதிய வடிவங்கள்' நூலினையும், 2000 இல் 'வெற்றிமணி' பொன்விழா மலரினையும், 29 வருடங்கள் நீண்ட இடைவெளியின் பின் மாதவி என்ற புனைபெயரில் 'இடைவெளி' என்ற 32 சிறுகதைகள் அடங்கிய தொகுப்பினையும், 2003 இல் மாதவி என்ற புனைபெயரில் ஓவியங்களுக்கு முக்கியத்துவம் தரும் 'அது என்பது இதுவா', தாய்நில ஏக்கத்தினை விளக்கும் 'என் காதல் கிராமத்தின் சாளரம்' கவிதை நூலினையும், நிலாம்கள் எனும் பெயரில் 'தமிழே காதல்' எனும் குறும்பா வகை கவிதைத் தொகுப்பினையும், 2007 இல் எட்டு உட்பிரிவுகளோடு வெளியான அறிவியல் கட்டுரைத் தொகுப்பான 'அதிசய உலா' ஆகியவற்றையும் வெளியிட்டுள்ளேன்.

**கேள்வி: வெற்றிமணி குறித்து சுருக்கமாக அறிமுகப்படுத்த முடியுமா?**

**பதில்:** ஆம். எனது தந்தையான மறைந்த ஆசிரியர் மு.க. சுப்ரமணியம் 1950 இல் நாலப்பிட்டியில் வெற்றிமணியை சிறுவர் சஞ்சிகையாக ஆரம்பித்தார். மாணவர்களை மையப்படுத்தி இலங்கையில் ஆரம்பிக்கப்பட்ட முதலாவது சிறுவர் மாத இதழ் இதுவாகும். 1979 வரை வெற்றிகரமாக வெளிவந்த இச்சஞ்சிகை தந்தையின் மறைவோடு நின்றுபோனது.

நான் 1981 இல் ஜேர்மனிக்கு புலம்பெயர்ந்தேன். அங்கு என்னை ஓரளவுக்கு நிலைப்படுத்திக்கொண்டு தந்தையால் ஆரம்பிக்கப்பட்டு நின்று போயிருந்த வெற்றிமணி சஞ்சிகையை 1994 இல் இடத்துக்கும் காலசூழலுக்கும் ஏற்றாற்போல் ஒரு ஜனரஞ்சக பத்திரிகையாக மீண்டும் தொடங்கினேன். இதன் முதலாவது இதழ் 1994 ஜுன் முதலாம் திகதி ஜேர்மனியில் வெளிவந்தது. அன்று முதல் இன்று வரையும் வெளியாகி 30 வருடங்களை நிறைவு செய்திருக்கிறது வெற்றிமணி.

இது மின்னிதழ் அல்ல அச்சில் வெளியிடப்படும் பத்திரிகையாகும். கொவிட் 19 பெருந்தொற்று காலத்தில் கூட தொடராக வெளிவந்த பத்திரிகையாக வெற்றிமணி விளங்குகிறது.

ஜேர்மனியில் வாழும் இளம் சந்ததியினரின் சாதனைகள், வெற்றிகள் என்பன வெற்றிமணி ஊடாக கடந்த 30 வருடங்களாகக் வெளிக்கொணரப்படுகின்றன. அவற்றில் கலை, இலக்கியம், கல்வி என்பன குறிப்பிடத்தக்க அம்சங்களாகும்.

கட்டுரை, சிறுகதை, தொடர் கதை உள்ளிட்ட பல அம்சங்களை உள்ளடக்கி வெளியிடப்படும் இப்பத்திரிகையில் சர்வதேசம், மருத்துவம், சமூகவியல், தொழில்நுட்பவியல், பாரம்பரியம் உள்ளிட்ட விடயங்களிலான கட்டுரைகள், புலம்பெயர் நாடுகளில் இடம்பெறும் நிகழ்வுகள் குறித்த செய்திகள், சினிமா துணுக்கள் அடங்கலாக பல்சுவை அம்சங்களும் சேர்த்துக் கொள்ளப்படுகின்றன.



நேர்கண்டவர்: மார்லின் மரிக்கார்

28 ஆம் பக்கம் பார்க்க...






# திரையுலகம் நீங்கள் அறிந்ததும் அறியாததும்

**வில்லனுக்கு பாடியும் புகழ் பெறலாம் என்ற உண்மையை லோகநாதனின் குரல் உறுதி செய்தது. (உலவும் தென்றல் காற்றினிலே, வாராய் நீ வாராய்)**

## தமிழ்த் திரையின் முதல் பின்னணிப் பாடகர் திருச்சி லோகநாதன்!

ச.சுந்தரதாஸ்
(ஆஸ்திரேலியா)

தமிழ் திரையுலகில் சாகா வரம் பெற்று விளங்குபவர்கள் பின்னணிப் பாடகர்கள். 85 ஆண்டுகளுக்கு மேலாக வெளிவந்து கொண்டிருக்கும் தமிழ் திரைப்படங்களில் – அனைத்துப் படங்களிலும் பின்னணிப் பாடகர்களின் பங்களிப்பு தொடர்ந்துகொண் டுள்ளது. அந்த வகையில் தமிழில் முதல் ஆண் பின்னணிப் பாடகர் என்ற பெரு மையை பெறுபவர் நூற்றாண்டு விழா நாய கரான கலைமாமணி திருச்சி லோகநாதன்.

நடிகர்கள் சொந்தக் குரலில் பாடத் தெரி ந்தால்தான் அவர்களுக்கு படத்தில் நடிக்க வாய்ப்பு என்று இருந்த அந்த கால நடை முறை 1945ம் ஆண்டளவில் தளர்வடையத் தொடங்கியது.

நடிகர்கள், குறிப்பாக கதாநாயக நடிகர் அழகாக, மிடுக்காகத் தோன்றி நடித்துக் கொடுத்தால் போதும், பாடல்களை அதில் தேர்ச்சி பெற்றவர்களை கொண்டு பாட வைத்து விடலாம் என்ற எண்ணம் ஜ/பிடர் பிச்சர்ஸ் அதிபர்கள் சோமு, மொஹிதீன் இருவருக்கும் உதித்தது. ஸ்ரீவள்ளி படம் மூலம் ஏவி எம் செட்டியார் அறிமுகப்படுத்திய யுக்தியை இவர்கள் கையாண்டனர் என்று கூறலாம்.

அந்த யுக்தியை ஜ/பிடர் பிச்சர்ஸ் அதி பர்கள் சோமுவும், மொஹிதீனும் தாங்கள் அடுத்து தயாரிக்கும் படத்தில் நடைமுறைப் படுத்திப் பார்க்க விரும்பினார்கள். முதல் தடவையாக கதாநாயகனாக நடிக்கும் பாடத்



தெரியாத நடிகருக்கு ஒரு பின்னணிக் குரல் கொடுப்பது, அப்படியே நகைச்சுவை நடி கருக்கு பாட ஒரு பின்னணிக் குரல் கொடு ப்பது என்று ஒரே நேரத்தில் இரு பாடகர்களை அறிமுகப்படுத்தா அவர்கள் முடிவு செய்த னர். எஸ்.எம் சுப்பையா நாயுடு இசையில் ராஜகுமாரி படத்தில் கதாநாயகன் எம்ஜி ஆருக்கு பின்னணி பாடகராக மாரியப்பா அறிமுகமானார். நகைச்சுவை நடிகர் எம். என் நம்பியாருக்கு, எம் எம் மாரியப்பாவின் சித்தப்பா பிள்ளை லோகநாதன் பாடி னார். ஆக முதல் பின்னணிப் பாடகர் என்ற பெருமையை இரண்டு சகோதரர்களும் பங்கு போட்டுக் கொண்டார்கள்!

லோகநாதநின் வாழக்கை வரலாற்றைப் பார்ப்போம். 1924 ம் ஆண்டு ஜுலை மாதம் 24ம் திகதி திருச்சியில் பிறந்த லோகநாதன் ஆரம்பக் கல்வியுடன் கல்விக்கு விடைகொடு த்தார். அவர் கவனம் முழுதும் சங்கீதத்தி லேயே சென்றது. நான்கு வருடம் நடராஜ பகவதரிடம் முறையாக சங்கீதம் கற்ற லோக நாதன் அப்படியே மேடை நாடகங்களிலும் நடிக்கத் தொடங்கினார். அப்படி மேடை நாடகங்களில் பாடி நடித்த லோகநாதனுக்கு கிடைத்த புரொமோஷன் தான் ராஜகுமாரி திரைப்படத்தில் முதன்முதலாக பாடும் வாய்ப்பு. ராஜகுமாரியைத் தொடர்ந்து ஜ/பிடர் தயாரித்த அபிமன்யு திரைப்படத் தில் எம் எஸ் விஸ்வநாதன் மெட்டமைத்து , சுப்பையா நாயுடு பெயரில் வெளிவந்த இனி வசந் தமாமே வாழ்விலே பாடலை கதாநா யகன் குமரேசனுக்காக லோகநாதன் பாடி னார். இதில் கதாநாயகியாக நடித்த யு ஆர் ஜீவரத்தினம் தானே நடித்து பாடிக் கொண்டார். இந்தப் பாடல் ரசிகர்கள் மத்தி யில் வரவேற்பை பெற்றது. லோகநாதனின் திரையுலக வாழ்வு உயர்த்துவங்கியது.

லோகநாதன் காமெடியனுக்கு பாடினார் ஹீரோவுக்கும் பாடினார் இனி என்ன? அடு த்தது வில்லனுக்கும் பாடினார். உண்மையில் லோகநாதன் வில்லனுக்கு பாடிய பாடல்கள் தான் இன்றும். எழுபத்தைந்து ஆண்டுகள் கழித்தும் உலவும் தென்றலின் வழியாக ஒலித்துக் கொண்டிருக்கிறது.

1950 வருடம் மாடர்ன் தியேட்டஸ் தயாரி த்த படம் மந்திரிகுமாரி. ஆன்டி ஹீரோ சப்ஜெட் . இதில் வில்லனாக நடித்து ரசி கர்களை கலங்கடித்த எஸ் ஏ நடராஜனுக்கு இரண்டு டூயட்கள். ஜி ராமநாதன் இசையில் உருவான உலவும் தென்றல் காற்றினிலே, வாராய் நீ வாராய் எனும் இரண்டு பாடல்களை யும் ஜிக்கியுடன் பாடி தமிழ்நாட்டின் பட்டி தொட்டி எங்கும் போய் சேர்ந்தார் லோகநா தன். வில்லனுக்கு பாடியும் புகழ் பெறலாம் என்ற உண்மையை லோகநாதனின் குரல் உறுதி செய்தது.

தொடர்ந்து அவர் பாடிய பாடல்கள் பெற்ற வெற்றி காரணமாக, லோகநாதன் பாடியது அண்ணனுக்கு. டி எஸ் துரைராஜ் தயாரி த்து நடித்த பானை பிடித்தவள் பாக்கிய சாலி படத்தில் லோகநாதன் பாடிய புருஷன் வீட்டில் வாழப் போகும் பொண்ணே பாடல் கல்யாணம் செய்யப் போகும் தங்கைகளுக் கான கீதோபதேசமாகவே மாறி விட்டது. அதே படத்தில் அண்ணனுக்கு பாடிய லோக நாதனிடம், தங்கையின் காதலனுக்கா கவும் பாட வாய்ப்பு அவரைத் தேடி வந்தும் லோகநாதன் மறுத்து விட்டார். அதற்கு அவர் சொன்ன காரணம் அண்ணனுக்கு பாடி விட்டு பின்னர் தங்கையின் காதலனுக்கு பாடுவது முறையல்ல என்பதுதான்.

லோகநாதன் பாடிய பிரபல பாடல்களை பட்டியலிட்டுக்கொண்டே செல்லலாம். சர்வா திகாரி படத்தில் எம் ஜி ஆருக்கு லோகநா தன் பாடிய ஆணழகா எந்தன் கைகள் பாடல் இனிமையாகவே ஒலிக்கிறது. அதே போல் நாலு வெளி நிலம் படத்தில் லோக நாதன் எல்.ஆர்.ஈஸ்வரியுடன் பாடிய ஊரார் உறங்கையிலே உற்றாரும் தூங்கையே பாடல் இன்றளவும் ஒலித்துக் கொண்டிருக்கி றது. லோகநாதனை பொறுத்த வரை தனக் கென்று சில கொள்கைகளையும், கோட்பாடு களையும் தன்னகத்தே வைத்திருந்தார். அதற்கு இசைபட இசை பாடியே வாழ்ந்து வந்தார்.

1950ம் ஆண்டுகள் தொடக்கம் பின்னணிப் பாடகர்கள் தயவில் தான் கதாநாயக நடி கர்கள் வாயசைத்து பாடி நடிக்க வேண்டும் என்ற நிலை உருவாகத் தொடங்கியதும் அதன் உடனடி பயன் ஏ.எம்.ராஜா, சிதம்பரம் சி எஸ் ஜெயராமன் இருவருக்குமே கிட்டியது. பராசக்தி எனும் தனது முதல் படத்திலேயே சிவாஜி ஹீரோவாகி விட அவருக்கு ஜெயரா மன்தான் பாட வேண்டும் என்ற நிலை எழுந்தது. எம்.ஜி.ஆர், ஜெமினி, எஸ்.எஸ். ஆருக்கு எல்லாம் ஏ.எம்.ராஜா பாடினார். இவர்களுக்கிடையில் இன்னாருக்குத்தான் லோகநாதன் பாடுவார் என்ற நிர்பந்தம் இன்றி எல்லோருக்கும் லோகநாதன் பாடிக் கொண்டிருந்தார்.

இந்த நேரத்தில் தான் அதிர்ஷ்ட தேவதை வந்து லோகநாதன் வீட்டு கதவை தட்டியபோது அதை திருப்பி அனுப்பிவிட்டார் லோகநா தன். தொடரும்.







விளம்பரம் அறிமுகம் செய்யும். தரம் அதை நிலைபெறச் செய்யும்.

# தாய்மண்ணில் வெற்றிமணி நிலாமுற்றம்

## வெற்றிமணி பத்திரிகையின் 30 ஆவது ஆண்டு நிறைவு விழா!







**06.07.2024 சனிக்கிழமை பருத்தித்துறை நகரில் சிறப்பாக நடைபெற்றது.**

தேவாரத்துடன் விழா ஆரம்பமானது. மங்கல விளக்கினை, யேர்மனி நுவுசு வானோலி அதிபர், அகரம் சஞ்சிகை ஆசிரியர் த.இரவீந்திரன் அவர்களின் அன்னை சின்னத்தங்கம் தர்மலிங்கம் ஏற்றிவைத்தார்.

தொடர்ந்து முனைவர் மனோன்மணி சண்முகதாஸ், வெற்றிமணி லிமிடெட் யு.கே. மகாமையாளர் ஜெயபவானி சிவகுமாரன்.

விழா அமைப்பாளர். திருமதி. யோ. சாந்தி.

ராஜாராணி சேவை இல்ல அதிபர் திருமதி. புலோரன்ஸ் ராணி. இருதயராஜா.

திருமதி. Dr. சகிதேவி. தயாபரன்

சமூக சேவையாளர். குரும்பசிட்டி பொ. தங்கராசா.

திருமதி லிங்கா. ஜெயபாலன்

முன்னாள் வெற்றிமணி சுவிஸ் பொறுப்பாளர்.

கவிஞர். த. ஐங்கரன்,

வெற்றிமணி (தாயகம்) முன்னாள் ஆசிரியர் வலன்ரீனா இளங்கோவன். ஆகியோர் ஏற்றிவைத்தனர்.

வரவேற்பு உரையை வெற்றிமணி பத்திரிகை ஆசிரியர் நிகழ்த்தினர். தன் உரையில் ஆரம்பகாலத்தில் வெற்றிமணி பத்திரிகை உருவாக்கம் இன்று போல் அல்ல, மிகவும் கடினமான ஒரு காலகட்டம், அன்று முதல் இன்றுவரை வெற்றிமணியின் வளர்ச்சிக்கு உதவும், வியாபார நிறுவனங்கள், படைப்பாளிகள், வாசகர்கள் என அவர்களது பணிகளையும் நன்றியுடன் சொல்லி இன்று இந்த விழாவிற்கு வருகை தந்தவர்களையும் குறிப்பிட்டு, வரவேற்பு உரையை நிறைவு செய்தார்.

மூத்த ஊடகவியலாளர், பாரதி இராசநாயகம் தலைமையில் விழா இடம்பெற்றது. அவர் தனது தலைமை உரையில் 30 வருடங்கள் தொடர்ந்து ஒரு பத்திரிகை செய்வது மாபெரும் சாதனை.

வெற்றிமணி ஆசிரியரின் முயற்சிகளுக்கு எம்மவா?கள் மத்தியில் கிடைத்துள்ள ஒரு அங்கீகாரம். இது எனவும் குறிப்பிட்டார்.

பிரதம விருந்தினராக பேராசிரியர் அ.சண்முகதாஸ், முனைவர் மனோன்மணி சண்முகதாஸ் கலந்து சிறப்பிக்க, சிறப்பு விருந்தினராக, உளவள ஆலோசகர் கோகிலா மகேந்திரன், பொறியியலாளர், சி.தயாபரன்.

டாக்டர் சகி. தயாபரன், தாயக வெற்றமணி முன்னாள் ஆசிரியர் வலன்ரீனா இளங்கோவன்,

ஆகியோர் கலந்து சிறப்பித்தனர்.

வாழ்த்துகள் குரும்பசிட்டி த. ஐங்கரன், கவிஞர் வ. வடிவழகையன் ஆகியோர் கவிமூலம் வாழ்த்துகள் தெரிவித்தனர்.

மேலும் வெற்றிமணி யின் 28 வது வெளியீடு வைகல் நூல் அறிமுகம் இடம் பெற்றது.

கரிணி கண்ணன் எழுதிய நூலின் நூல் நய உரை முனைவர் மனோன்மணி சண்முகதாஸ் நிகழ்த்தினார். வைகல் என்ற நூலின் பெயர் பழமையான சொல். இவற்றை இன்று அறியவைக்கிறது. இந்நூலின் பெயர்.

நூலின் உள்ள சில கட்டுரைகளை உதாரணம் காட்டி நூலின் தன்மையை உரைத்தார்.

அதனைத் தொடர்ந்து உள வள நல ஆலோசகர் கோகிலா மகேந்திரன் அவர்கள் உரையாற்றினார். தனதுரையில் வெற்றிமணியில் அமரர் பொ. கனகசபாபதி அவர்கள் எழுதுகிறார் என்றறிந்த பின்னர் தனக்கும் வெற்றிமணி மீது அபிமானம் அதிகமானது என்றார். திறவு கோல், (இது ஒரு விண்ணானம்) மாறன் மணிக்கதைகள் இரண்டும் வெற்றிமணி வெளியீடாக வந்ததைக் குறிப்பிட்டார்.

பிரதம விருந்தினராக கலந்து உரையாற்றிய பேராசிரியர் அ. சண்முகதாஸ் யேர்மனியில் வெற்றிமணி எடுத்த விழாக்களையும், அவற்றில் பலவற்றில் தான் கலந்துகொண்டதும், மனோன்மணி சண்முகதாஸ் அவர்களின் பிஞ்சு மனங்களின் தேடல் நூலை வெற்றிமணி தனது வெளியீடாக வெளியிட்டதுடன், யேர்மனியில் வெளியீட்டு விழாவையும் செய்ததை நினைவு கூர்ந்து உரையாற்றினார்.

சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றிய பொறியியலாளர் சி. தயாபரன் அவர்கள் வெற்றிமணி ஸ்தாபகர் குரும்பசிட்டி பொன் பரமானந்தர் பாடசாலையை தரம் உயர்த்தியும், அவரது காலத்தில் 800.மாணவர்கள் கல்விகற்றதையும், இன்று உள்ளவர்கள் அறியவேண்டும், அத்தோடு வசதிகள் சேவைகள் கட்டணத்தில் ஆசிரியர்களாக பணியாற்றியவர்கள் நிரந்தமாக்கப்பட வேண்டும் என முதல் அவர்களுக்கான ஒரு சங்கம் அமைத்து போரடியவர் மு. க. சுப்பிரமணியம் அவர்கள் என்றார். இன்று சிவகுமாரன் வெற்றிமணி பத்திரிகையை 30 வருடங்களாக வெற்றியுடன் நடத்துவது மகிழ்ச்சி அளிக்கிறது என்றார்.

சிறப்பு விருந்தினர் வலன்ரீனா இளங்கோவன் அவர்கள் 2005 ம் ஆண்டு தாயகத்தில் வெற்றி மணி நடத்திய அனுபவத்தையும், யாழ்பாண நாட்டிய மரபுகள் என்ற தனது நூலை யேர்மனியில் வெற்றிமணி வெளியீடாக வெளியிட்டதையும், வெற்றிமணி விழாவில் கலந்து சிறப்பிக்க தன்னை அழைத்ததையும், நினைவுகூர்ந்தார்.

வெற்றி மணி தயாரிப்பில் வெளிவந்த எழுதாத கவிதைக்கு முதல் பரிசு, குறும்படம், தம்பட்டம் இரண்டும் திரையிடப்பட்டது. பார்வையாளர்களது பாராட்டைப் பெற்றது.

எழுதாத கவிதைக்கு முதல் பரிசு குறும்படத்தில் இடம் பெற்ற ஊரிக் காட்டுக்குள்ள பாடலும், தம்பட்டம் குறும்படத்தில் நோர்வே கவிதா லட்சுமி அவர்களுடன் நெறியாட்கையில் யேர்மனியில் தெருவிழா விழாவில் இடம் பெற்ற குடமாடும் நடனம் மற்றும், நடிகர்களது இயல்பான நடிப்பும் பேசப்பட்டது.

நன்றியுரையை விழா அமைப்பாளர் யோ சாந்தியவர்கள் நிகழ்த்தினார்.

மாலை 3.20 க்கு ஆரம்பமான விழா மாலை 6.30 நிறைவடைந்தது.

ராஜாராணி சேவை இல்லம் மண்டப ஒழுங்குகளை சிறப்பா செய்து இருந்தார்கள்.

டொட்மண்ட் மாநகரில்....
தமிழர் அரங்கம்

சனிக்கிழமை 15.00– 18.00
திரையிசை நடனம்
(Cinimatic Dance)

கீபோர்ட் (Keyboard)
வெள்ளிக்கிழமை 18:00–19:00
அனுபவம் வாய்ந்த ஆசிரியர்களால் கற்பிக்கப்படுகிறது.சிறுவர்களில் இருந்து பெரியோர்கள் வரை இணைந்து கொள்ளலாபம்
Für Kinder und Jungendliche und Erwachsene!
6€ Pro Stunde



வெள்ளிக்கிழமைகளில்
Jeden Freitag

தமிழ் மொழி (Tamillsche Sprachunterricht)
வெள்ளிக்கிழமை 16:00–17:45
Free
அ ஆ இ ஈ உ
சிறார்களுக்கும்,இளையோர்களுக்கும், எளிமையான முறையில் தமிழ் கற்பிக்கப்படும்.
Für Kinder und Jungendliche!Auch speziell jugendliche, die sich mit der tamilische Sprache nicht auskennen

யேர்மன் மொழி (Deutsch für Anfänger / Innen)
ICH LERNE DEUTSCH
6€ Pro Stunde
வெள்ளிக்கிழமை 17.45 –19.15
யேர்மன் மொழியில் பேசவும் எழுதவும் கற்பிக்கப்படும்
யேர்மன் குடியுரிமை பெறுவதற்கு பயன் உள்ளதாக அமையும்

தமிழர் அரங்கம்
Rheinische Srt.76-80
44137 Dortmund
Info:0151 633 633 33
0178 146 006 3

# தாய்மண்ணில் வெற்றிமணி நிலாமுற்றம்

## வெற்றிமணி பத்திரிகையின் 30 ஆவது ஆண்டு நிறைவு விழா!




NANDY'S CURRY'S & MORE WWW.NANDYS.DE
Düsseldorf
ஒரே குடையின் கீழ் எங்கள் சேவை

**Nandy's Catering & Partyservice**

உங்கள் இல்லத்தில் எந்த வைபவங்களாக இருந்தாலும் குன்றாத சுவையுடன், சுடச் சுடப் பரிமாறுகின்றோம். இலங்கை, இந்திய, ஐரோப்பிய உணவுகளையும் தயாரித்து வழங்குகின்றோம்.

பரிமாறுதல் ஒரு கலை அது எமது நிறுவனத்தின் கைவந்தகலை!

உணவு விநியோகம் பரிமாறல் மற்றும் நிழல்படம், வீடியோ அதுமட்டுமன்றி எமது திறமையான ஊழியர்கள் உங்கள் விழாவை திட்டமிட்டுதல், திருமணமேடை, மண்டபம் மற்றும் மண்டபச் சோடனைகள் மற்றும் நடைமுறைப்படுத்துதல் போன்றவைகளுக்கு உதவ ஆயத்தமாக உள்ளோம்.

தொடர்புகளுக்கு: 0173-7424955
0211-7691974

www.Nandys.de | email: info@nandys.de


நீண்டகாலம் மக்கள் மனதில் நம்பிக்கை ஒளி பரப்பும் தங்க நகையகம்
Jaffna Bazar Jewellery
JB
தங்க நகைகள் என்றால் தங்கள் மனதில் நிலைத்து இருப்பவர்கள் நாங்கள் என்றும் நாடுகள்
2024ம் ஆண்டின் புதிய வரவு! புத்தம் புது அழகிய டிசைன்களில் தங்க நகைகள்
பொன்னுருக்கு, காதுகுத்து வைபவங்களுக்கு எம்மை அழையுங்கள்
திருத்த வேலைகள் குறுகிய காலத்துள் செய்து தரப்படும்.
Branch:
Jaffna basar.
Taunus Str 31,
60329 Frankfurt Main
உங்கள் இலத்திற்கு தேவையான மளிகைப் பொருட்கள் என்றும் போல் மலிவு விலையில் கிடைக்கும்
KADHIR
Lalla
Basmati Rice
BASMATI RICE
ஆலயங்களுக்கு தேவையான பூஜை பொருட்கள் எம்மிடம் நிறைவாக உண்டு
பசுமையான மரக்கறி வகைகள்
கடல் உணவு வகைகள்
அனைத்தும் எம்மிடம் தரமாக மலிவாகக்கிடைக்கும்
Jaffna Bazar
Jaffna Bazar, Kaiser Straße.49 , 69329 Frankfurt Main
Tel: 069 25 62 6353 \ 0049 69 25626353
0049 179 4792961 \ 0049 151 71520425

# அபிநயக்ஷேத்ரா நடனக் குழுவினர் 'தெய்வீகத் திருமணம்'





நுவரெலியா சீத்தா அம்மன் ஆலயம்






ராமாயண வரலாற்று சிறப்பு மிக்க புண்ணிய பூமியான சீதா எலிய , சீதை அம்மன் ஆலயத்தில் ஸ்ரீ ராமர் – சீதா தேவி தெய்வீகத் திருக்கல்யாணமும் பட்டாபிஷேகமும் பக்தர்கள் நிறைந்து சூழ வெகு சிறப்பாக முதன் முறையாக நடைபெற்றது.

இதில் அபிநயக்ஷேத்ரா நடனக் குழுவினர் " தெய்வீகத் திருமணம் " என்னும் நாட்டிய நாடகத்தினை சமர்ப்பித்து அனைவரதும் ஏகோபித்த அன்பினையும் பாராட்டினையும் பெற்றனர்.

கர்நாடகா ஸ்ரீ சந்திரவதன ஆசிரமத்தின் பீடாதிபதி உட்பட இந்திய ராமாயண குழுவினர் , சுவாமி விவேகானந்தா கலாசார நிலையம் இந்திய உயர் ஸ்தானிகர் ஆலயம் பணிப்பாளர் பேராசிரியர் முனைவர் திரு அங்குரான் தத்தா மற்றும் பல வெளிநாட்டு பக்தர்கள் என ஏராளமானவர்கள் கலந்து சிறப்பித்தனர். மெய்சிலிர்த்து கண்ணீர் மல்க



கலையர்ப்பணம் நிகழ்த்த அபிநயக்ஷேத்ராவிற்கு அரும் வாய்ப்பளித்த ஆலய காப்பாளர் திரு ஆதிமூலம் , திரு நடராஜா, திருமதி பாரதி நடராஜன் , ஆலய உறுப்பினர்கள் அனைவர்க்கும் எம் எல்லையற்ற அன்பும் நன்றியும் ??

பங்குபற்றிய அபிநயக்ஷேத்ரா மாணவர்கள் அம்ருதா சந்திரசேகர் , பூமாலக்ஷ்மி அசோகன் , அபிலாஷினி மகேந்திரகுமார் , ரிஷிகேஷா செம்பையா , பிரித்திகா சஞ்சீஸ்குமார் , ஆடல் கலைஞர்கள் திருமதி சுதா சத்தியநாதன் , திரு ஜெகநாதன் சஞ்ஜீவன் , திரு பதும் சாமர ஆகியோர்க்கும் அகலிகையாக பாத்திரம் ஏற்று ஆடல் வழங்கிய பாரிஸ் நாட்டின் சிரேஷ்ட நடன ஆசிரியர் திருமதி ரேனுகா சுரேஷ் அவர்களிற்கும் நன்றிகளும் பாராட்டுகளும்.

**கலாசூரி. திவ்யா சுஜேன்.**

---

## சந்தித்தேன்...



கலாசூரி திவ்யா சுஜேன்.
சந்திப்பு. 25.06.2024. கொழும்பு.

வெற்றிமணி பத்திரிகை யில் கடந்த ஏழு ஆண்டுகளுக்கு மேலாக தொடர்ந்து நின்னைச் சரணடைந்தேன், எத்தனை கோடி இன்பம் வைத்தாய் என தொடராக பாரதியின் பாடல்களை, தன்கோணத்தில் பதிவு செய்து, வாசிப்பவர்களை மேலும் பலகோணங்களில் கண்டு மகிழ்விக்கும் வண்ணம் எழுதும் எழுத்துக்கு சொந்தக்காரி கலாசூரி திவ்யா சுஜேன்.

பரதத்தில் தமிழ் சுரப்பதை கண்டு வெற்றிமணி தன் வசமாக்கியவர்களில் திவ்யாவும் ஒரு வர்.

பரதத்தில் இவள் ஒருவகை. எனக்கு ஆதியும் பிடிக்கும் அந்தமும் பிடிக்கும். எனவே திவ்யாவையும் பிடிக்கும்.

எங்கு நின்றாலும் கேட்டதை குறித்த நேரத்தில் எழுதித் தருவது பிடிக்கும்.

இலங்கை செல்லும் ஒவ்வொரு தடவையும் ஒரு குறித்த நேரம் ஒதுக்கி, ஒரு நாள் சில மணிநேரம் வெற்றிமணி பற்றியும், தனது நடன முயற்சிகள் பற்றியும் உரையாடுவாள். மனதுக்கு உற்சாகம் தரும் வண்ணம் சந்திப்பு அமையும்.

வயதில் சிறியவள், அன்பில் பெரியவள்.





17 வருட அனுபவம்



100% இலவச சேவை


நீங்கள் வீடு வேண்டுவதற்கான அனைத்து விதமான வங்கி கடன்களையும், மற்றும் வீடு சம்மந்தப்பட்ட ஆலோசனைகளையும், மிகச்சிறந்த முறையில் தமிழிலே உங்களுக்கு செய்து தரப்படும்.

## Sudharshan Arasapillai

-Bankkaufmann-
-Zertifizierter Baufinanzierungsbetreuer (Univ. Passau)-

Bezirksleiter der Bausparkasse Schwäbisch Hall AG
im Hause der Volksbank Rhein-Lippe eG
Am Neutor 23, 46535 Dinslaken

Büro: 0281- 922 6994
Mobil: 01522-2684277
s.arasapillai@schwaebisch-hall.de




## டொனால்ட் ட்ரம்ப் மீது துப்பாக்கிச் சூடு:

# அமெரிக்க வரலாற்றில் ஜனாதிபதி மீதான படுகொலை முயற்சிகள்

**இக்கட்டுரை முன்னாள் மற்றும் பதவியில் உள்ள அமெரிக்க ஜனாதிபதிகள் மீதான படுகொலை முயற்சிகளை பட்டியலிடுகிறது**

19 ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் இருந்து டொனால்ன் ட்ரம்ப் வரை, அமெரிக்க ஜனாதிபதிகளின் மீதான படுகொலை முயற்சிகள் மற்றும் சதிகள் ஏராளமாக நடந்துள்ளன.

அமெரிக்காவில் அரசியல் படுகொலை, படுகொலை முயற்சிகள் இது முதற்தடவையல்ல. ஆபிரகாம் லிங்கன், ஜெ எப் கென்னடி, மார்டின் லூதர் கிங் ஆகியோர் படுகொலை செய்யப்பட்டு இருந்தனர்.

### ட்ரம்ப் மீது துப்பாக்கிச் சூடு :



அமெரிக்க முன்னாள் அதிபர் டொனால்ட் ட்ரம்ப் மீது துப்பாக்கிச் சூடு மேற்கொள்ளப்பட்டுள்ளது. அமெரிக்க ஜனாதிபதி தேர்தல் நடைபெற உள்ள நிலையில் முன்னாள் அதிபர் டொனால்ட் டிரம்ப் பென்சில்வேனியாவில் பட்லர் நகரில் குடியரசு கட்சியின் அதிபர் வேட்பாளராக உரையாற்றிக் கொண்டிருந்த போது அவர் மீது துப்பாக்கிச் சூடு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

துப்பாக்கிச் சூட்டில் டொனால்ட் ட்ரம்பின் காதுப் பகுதியில் காயம் ஏற்பட்டுள்ளது. திறந்த மேடையில் உரையாற்றிக் கொண்டிருந்த போது அவர் மீது துப்பாக்கிச் சூடு மேற்கொள்ளப்பட்ட போது இலக்கு தவறி அவரது காது பகுதியில் தாக்கியுள்ளது.

உடனடியாக சுதாரித்துக் கொண்ட ட்ரம்ப் கீழே குனிந்து தன்னை பாதுகாத்து கொண்டார். உடனடியாக விரைந்த பாதுகாப்பு தரப்பினர் மேலும் அசம்பாவிதம் ஏற்படாத வகையில் நிலமையை கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வந்திருந்தனர்.

### அடுத்த ஜனாதிபதி ட்ரம்ப் ?

துப்பாக்கிச் சூட்டில் மயிரிழையில் தப்பினார் ட்ரம்ப் என்றும், அடுத்த ஜனாதிபதி ட்ரம்ப் உறுதியாகிவிட்டது எனவும் சில ஊடகங்கள் சிலாகித்து எழுதத் தொடங்கிவிட்டன.

அமெரிக்க அரச கட்டமைப்புக்கு புறம்பாக செயற்படுவார் என நம்பபப்பட்ட ட்ரம்ப் நேட்டோவை பலவீனப்படுத்துவார் என்றும் ஊகிக்கப்பட்டது. டொனால்ட் ட்ரம் படுகொலை செய்யப்படலாம் என்ற அச்சம் ஏற்கனவே இருந்து வந்தது.



ஐங்கரன் விக்கினேஸ்வரா

அத்துடன் ரஷ்யாவுக்கு ஆதரவாகச் செயற்படுவார் என்றும், உக்ரைன் யுத்தத்தை ரஷ்யாவுக்கு ஆதரவாக முடிவுக்கு கொண்டுவருவார் போன்ற காரணங்களால் இவரின் உயிருக்கு ஆபத்து ஏற்படுத்தப்படலாம் என்ற அச்சமும் நீண்டகாலமாக இருந்தது.

இத்தகைய நிலையில் அனுதாப வாக்குகளிலாயே டொனால்ட் டிரம்ப் வெல்லக்கூடிய சாத்தியங்கள் தற்போது எழுந்துள்ளது.

### அமெரிக்க வரலாற்றில் படுகொலை:

ஜனவரி 30, 1835 இல், ஆண்ட்ரூ ஜாக்சன் ஒரு படுகொலை முயற்சியை அனுபவித்த முதல் ஜனாதிபதி ஆவார். அப்போது ரிச்சர்ட் லாரன்ஸ் இரண்டு முறை கேபிட்டல் நகரில் அவரை சுட முயன்றார். லாரன்ஸின் இரண்டு கைத் துப்பாக்கிகளும் தவறாக சுடப்பட்டதால் அந்த முயற்சி தோல்வியடைந்தது.

வரலாற்றில் அமெரிக்காவின் நான்கு பதவியில் இருக்கும் ஜனாதிபதிகள் கொல்லப்பட்டனர். 1865 இல் ஆபிரகாம் லிங்கனை ஜான் வில்க்ஸ் பூத் என்பவர் சுட்டுக் கொன்றார்.

அதன் பின் இன்னோர் அதிபர் ஜேம்ஸ் ஏ. கார்ஃபீல்ட் 1881இல் சார்லஸ் ஜே. கிடோவால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

1901இல் வில்லியம் மெக்கின்லி எனும் ஜனாதிபதியை லியோன் சோல்கோஸ்ஸால் என்பவர் சுட்டுக் கொன்றார்.



பலத்த சர்ச்சை உருவாக்கிய ஜான் எஃப். கென்னடி கொலை 1963இல் லீ ஹார்வி ஓஸ்வால்ட் என்பவரால் நடாத்தப்பட்டது.

இற்றைவரை மூன்று ஜனாதிபதிகள் படுகொலை முயற்சியில் காயமடைந்துள்ளனர். முன்னாள் ஜனாதிபதி தியோடர் ரூஸ்வெல்ட் 1912, ஜான் ஷ்ராங்க் என்பவரால் காயமடைந்தார்.

பனிப்போர் காலத்தில் பிரபல்யமான ரொனால்ட் ரீகன் 1981, ஜான் ஹிங்க்லி ஜூனியர் என்பவரால் சுடப்பட்டு காயமடைந்தார். நேற்று டொனால்ட் டிரம்ப் பென்சில்வேனியாவில் இடம்பெற்ற பேரணியில் உரையாற்றிக் கொண்டிருந்த போது அவர் மீது துப்பாக்கிச் சூடு மேற்கொள்ளப்பட்டுள்ளது. ஆயினும் காயங்களுடன் தப்பிக் கொண்டார். இந்த எல்லா நிகழ்வுகளிலும், தாக்குபவர்களின் ஆயுதம் ஒரு துப்பாக்கியாகவே இருந்துள்ளது.

30 ஆம் பக்கம் பார்க்க...







சேவியர்
(தமிழ்நாடு)

நடுப்பக்கம்

# நமக்கு ஏன் வீண் வம்பு!

ஒரு திரைப்படத்தில் ஒரு காட்சி வரும். ஒரு தந்தை தனது மகனுக்கு அறிவுரை சொல்லிக் கொண்டிருப்பார், "இருக்கிற இடம் தெரியாம இருந்துட்டுப் போயிடணும்பா" என்று ! உண்மையில் இன்றைய சமூகத்தின் ஒட்டு மொத்தப் பிரதிபலிப்பாய் அந்த ஒற்றை வசனத்தை நாம் கருதிக் கொள்ளலாம்.

இன்றைய சமூகத்தில் 'கொடுமை கண்டு பொங்குதல்' ரொம்ப ரொம்ப குறைந்து விட்டது. காலப்போக்கில் இதெல்லாம் அப்படியே மழுங்கி இல்லாமலேயே போய்விடுமோ எனும் கவலை கூட உண்டு. முன்பெல்லாம் ஒருவர் இலஞ்சம் வாங்கி பிடிபட்டால் அது பெரிய அவமானமாகக் கருதப்படும். 'அவன் இலஞ்சம் வாங்கி பிடிபட்டானாம்டே.. இனி அவன் எப்படி மானங் கெட்டு நடப்பான் ?' என பேசிக்கொள்வார்கள். இப்போதெல்லாம் அத்தகைய குற்றச்சாட்டுகளை புறங்கையால் தட்டி விட்டு, அடுத்த இலஞ்சத்துக்காய்க் கை நீட்டுகின்றனர் அதிகாரிகள். இலஞ்சத்தைப் புடிக்க வரும் அதிகாரிகளுக்கே இலஞ்சம் குடுக்கலாம் எனும் நிலமையும் உண்டு என்கின்றனர்.

இன்னும் ஒரு படி போய், 'என்னப்பா.. அவன் அவன் ஆயிரம் கோடி, இலட்சம் கோடின்னு அடிக்கிறான்.. இவன் என்ன அம்பதாயிரம் ரூபா இலஞ்சம் வாங்கியிருக்கிறான். இதைப் போய் பெருசா பேசறியே' என இலஞ்சம் வாங்கியதையே பொதுமக்கள் நியாயப்படுத்தக் கூடிய நிலமைக்கு உலகம் இன்றைக்கு சென்று விட்டது.

இன்னொரு உதாரணமாக, சமீபத்தில் வெளியான ஒரு திரைப்படம் இலஞ்சம் வாங்குபவர்களைத் தண்டிப்பதாய் அமைந்திருந்தது. பிரமாண்டப் பொருட்செலவில் எடுக்கப்பட்ட அந்தப் படம் படு தோல்வியைச் சந்தித்தது. அந்த திரைப்படம் குறித்து ஒரு பிரபல விமர்சகர் பேசும்போது, 'இந்தக் காலத்துல இலஞ்சம் எல்லாம் நார்மலாயிடுச்சு.. அதைப் பற்றி பேசினா எவன் பாப்பான்' என வெகு யதார்த்தமாகப் பேசினார். ஒரு பெரிய பாவச் செயலாய் இருந்தது, சமூகத்தின் சாதாரண நிகழ்வாய் எல்லோரும் கடந்து போகின்ற நிகழ்வாய் மாறியிருக்கிறது என்பது தான் கவனிக்க வேண்டிய செய்தி.

இன்னும் சில காலம் போனால் இந்த இலஞ்சத்தைப்போல, கொலை, கொள்ளை, பாலியல் வன்கொடுமை இவையெல்லாம் சகஜமாகலாம். சில பல ஆண்டுகளுக்குப் பின், 'என்ன ஒரு பாலியல் வன் கொடுமை தானே அதைப் போய் பெருசா பேசறீங்க' எனப் பேசும் காலம் வரலாம்.

எந்த ஒரு சிக்கலையும் துவக்கத்திலேயே களையாவிடில் அது முள்மரமாய் வளர்ந்து ஊரையே அழித்து விடும். ரொம்ப நாட்கள் முள்காடைப் பார்த்துப் பழகிவிட்டால் 'ஆமா முள்ளு.. சோ வாட்.. நீ கொஞ்சம் தள்ளு' என்று சொல்லிவிட்டுச் சென்று விடுவோம்.

சின்னச் சின்ன பிரச்சினைகள், சவால்கள் நிகழும் போதே எதிர்க்கப் பழகிவிட்டால் பெரிய பெரிய பிரச்சினைகள் உருவாகாமல் தடுக்க முடியும். ஒரு சிறுவன் ஒரு சின்னப் பொருளைத் திருடும்போதே



தடுத்தால் பிற்காலத்தின் அவன் பெரிய கொள்ளைக்காரன் ஆவதிலிருந்து தடுக்கலாம். அதே போல தான் ஒரு சமூகமும் தன்னுடைய அறத்தை விட்டு விலகும்போது தடுத்தால், அது மிகப்பெரிய அழிவில் விழுவதிலிருந்து தப்பலாம்.

ஆன்மிக விஷயத்திலும் இதை நாம் பொருத்திப் பார்க்கலாம். ஒரு மனிதன் தன்னுடைய பாவ சிந்தனைகளையும், செயல்களையும் தொடக்கத்திலேயே களைய ஆரம்பித்தால் அவனுடைய மனம் தூய்மையாகிக் கொண்டே இருக்கும். அவன் பிற்காலத்தில் பாவத்தை விலக்கிய ஒரு நல்ல மனிதனாய் வாழ அது அவனுக்கு துணை செய்யும். இன்றைக்கு மனிதர்கள் பிரச்சினைகளுக்கு எதிராகக் குரல் கொடுக்காததன் முக்கிய காரணம் அவர்கள் தனி மனிதர்கள் என்பதால் தான். பிரச்சினைக்கு எதிராய்க் குரல் கொடுத்தால் வருகின்ற பின் விளைவுகளை அவர்கள் மட்டுமே சந்திக்க வேண்டும் என்பதால் தான். இன்றும் கிராமங்களில் எல்லோரும் ஒன்றாய் நின்று சண்டை போடுவதைப் பார்க்கலாம். உள்ளூர்க்காரரை வெளியூர்க்காரர் எதிர்த்தால் ஊரே சேர்ந்து உள்ளூர்க்காரரைக் காப்பாற்றும். ஆனால் நகர்புறத்தில் அந்த நிலமை இல்லை. ஓட ஓட ஒரு அப்பாவியை நடுத்தெருவில் வெட்டிக் கொன்றால் கூட ஆயிரம் பேர் வேடிக்கை பார்ப்பார்களே தவிர, யாரும் குரல் கொடுக்க மாட்டார்கள். காரணம் பயம் ! அவர்களுக்கும் அந்த அரிவாள் வெட்டு விழும் எனும் பயம். ஒரு பத்து பேர் எதிர்த்துக் குரல் கொடுத்தால் அருவாளுடன் நிற்பவன் பின்வாங்குவான் என்பதே உண்மை. ஆனா நமது அச்சம் அதை அனுமதிப்பதில்லை.

நம் அச்சத்தின் இன்னொரு காரணம், நம்முடைய ஆளும் அரசு நமக்குத் துணையாய் நிற்குமா எனும் சந்தேகம் தான். சமூகமும் துணையில்லை, அரசும் துணையில்லையேல் எதிர்த்துக் குரல் கொடுப்பவர்கள் மட்டுமே அவஸ்தைப்படும் நிலமை உருவாகும். அவர்களுடைய குடும்பம் மட்டுமே பாதிக்கப்படும் நிலை உருவாகும். அப்படி ஒரு சூழல் வந்தால் நாமும் சொல்வோம், 'கண்டும் காணாம போயிடுவோம்பா'.

17 ஆம் பக்கம் பார்க்க...






# நமக்கு ஏன் வீண் வம்பு!

இன்னொரு காரணம் நமது மனநிலை. ஏதோ ஒரு தேவதூதன் விண்ணிலிருந்து இறங்கி வந்து எல்லோரையும் காப்பாற்றுவான் என நாம் நம்புகிறோம். சமூகத்தைத் திருத்துவதோ, சமநிலையைப் பாதுகாப்பதோ நமது கடமையல்ல, ஏதோ ஒரு மூன்றாவது நபரின் கடமை என நினைக்கிறோம். நம்ம சினிமாக்களும் அதைத் தானே கற்றுத் தருகின்றன. எல்லோரையும் போட்டு அடி அடி என வில்லன் அடிக்க, மக்கள் எல்லாரும் ஒதுங்கி நின்று வேடிக்கை பார்க்க, கடைசியில் ஸ்லோ மோஷனில் வரும் ஹீரோவின் கால்கள் தான் நீதியை நிலைநாட்டுகின்றன. தொடர்ந்து சினிமா பார்த்துப் பார்த்து அப்படி யாரோ வந்து. காப்பாற்றுவார் என்றே பாவம் தமிழன் நம்பிக் கொண்டிருக்கிறான்.

அதையும் தாண்டி, ஒரு பிரச்சினை எந்த அளவுக்கு என்னைத் தனிப்பட்ட விதத்தில் பாதிக்கிறது என்பதும், நான் எந்த அளவுக்கு அந்தைப் பிரச்சினையில் என்னை ஈடுபடுத்திக் கொள்ள வேண்டும், என்பதை நிர்ணயிக்கிறது. எனது வாழ்க்கைத் துணையை, எனது பிள்ளைகளை, எனது பெற்றோரை, எனது வீட்டை நேரடியாகத் தாக்கும் பிரச்சினைகள் தான் முதன்மை இடத்தைப் பெறுகின்றன. அதைத்தாண்டி பக்கத்து வீட்டு சன்னலில் விழுகின்ற பிரச்சினைகளுக்குக் கூட நான் கதவுக் காதுகளைப் பொத்தித் தான் அமர்ந்திருக்கிறேன். அதனால் தான் பொதுவான



பிரச்சினைகள் தீர்க்கப்படாமல் தொடர்ந்து கொண்டே இருக்கின்றன.

கைகள் இணைந்தால் தீர்வுகள் உருவாகும், ஆனால் இணையாதபடி நமது வாழ்க்கை நம்மை இதயத்தால் விலக்கி வைத்திருக்கிறது. நமது வீடுகள் சுவரோடு சுவர் சேர்த்து எழுப்பப்படுகின்றன. ஆனால் நமது இதயங்கள் மைல்களுக்கு அப்பால் தான் மையம் கொண்டிருக்கின்றன.

'நீ மட்டும் ஓட்டுப் போட்டு என்ன மாறப் போவது ?' , 'நீ மட்டும் லஞ்சம் வாங்கலேன்னா நாடு திருந்திடுமா ?', 'நீ மட்டும் எதிர்த்து பேசினா எல்லாம் சரியாயிடுமா ?' எனும் சிந்தனைகளை நமது சமூகம் நமக்குள் விதைத்துக் கொண்டே இருக்கிறது. அதனால் நாமும் நினைப்போம், 'நான் மட்டும் பேசி என்ன ஆவப் போவது.. அப்புறம் என்ன,.. பேசாமலேயே இருந்துடுவோம்'. இப்படி நம்மால் எதையும் மாற்ற முடியாது என நம்புகின்ற மனநிலை சமூக மாற்றத்துக்கான விதையைத் தூவ விடுவதில்லை.

அப்படியே ரொம்ப கஷ்டப்பட்டு சமூகத்தில் குரல் கொடுப்பவனை சாதீய ரீதியாகவும், மத ரீதியாகவும், மொழி ரீதியாகவும், அரசியல் ரீதியாகவும் அடையாளப்படுத்தி அவனுடைய சிந்தனையை நீர்த்துப் போகச் செய்யும் பணியை முதலாளித்துவ அமைப்புகள் கனகட்சிதமாய்ச் செய்து முடிக்கின்றன. அதனால் களம் புகும் மனிதர்களுக்கு கெட்ட பெயர் வந்து சேர்கிறது. 'சும்மா இருந்திருந்தா மானத்தோட இருந்திருக்கலாம்.. ' எனும் விரக்தி மனநிலையில் மனிதர்கள் வந்து சேர்கின்றனர்.



இன்னொரு விதத்தில் பார்த்தால், இன்றைய டிஜிடல் யுகம் நம் முன்னால் செய்திகளை குப்பை லாரி போலக் கொண்டு கொட்டுகிறது. அதில் சரி எது தவறு எது என பளிச் என கண்டுபிடிக்கவே முடியாது. நாம் கொண்டிருக்கின்ற அனுமானம் சரியா, நாம் எடுக்கின்ற முடிவு சரியா எனும் குழப்பத்தில் நாம் மிக எளிதாய் விழுந்து விடக்கூடிய வாய்ப்பு இருக்கிறது. இதுவும் ஒரு வகையில் மக்கள் களத்தில் இறங்குவதைத் தடுக்கிறது எனலாம். கூடவே, டிஜிடல் உலகம் நம்மை நாலு கால் பாய்ச்சலில் தானே ஓட வைக்கிறது ! காலையில் எழுந்து நள்ளிரவில் தூங்கும் வரை ஏதோ ஒரு அலுவல் நம்மை அழுத்திக் கொண்டே இருக்கிறது. இதற்கிடையில் சமூகத்தைச் செப்பனிட நமக்கெங்கே நேரம் !

இப்படி இருக்குமிடம் தெரியாமல் இருந்தால், கடைசியில் நம் சமூகம் இருக்க வேண்டிய இடத்தில் இருக்காமல் போய்விடும். இந்த சூழலில் என்ன செய்யலாம் ?

நமது பிள்ளைகளுக்கும், சக மனிதர்களுக்கும் விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும். மனுக்குலம் எப்படி இணைந்து வாழவேண்டும், அதன் தேவை என்ன என்பதை சிறு சிறு இயக்கங்கள் வாயிலாக புரிய வைக்க வேண்டும்.

சமூகத்தில் நல்லிணக்கத்தைக் காக்கவும், தனி மனித ஒழுக்கத்தைப் பேணவும், தவறுகள் நடக்கும் போது அதை தட்டிக் கேட்கவும் மக்களோடு அரசு, காவல்துறை போன்றவையும் கைகோர்க்க வேண்டும். கூடவே தனியார் அமைப்புகள், இயக்கங்கள், நிறுவனங்கள் போன்றவையும் இணையலாம்.

தவறு செய்பவர்களைத் தட்டிக் கேட்பவர்களுக்கான பாதுகாப்பை சமூகமும், காவல் துறையும் அளிக்கும் எனும் நிலையை உருவாக்க வேண்டும். அப்படி முன்வரும் நபர்களுக்கு அங்கீகாரங்களும், பரிசுகளும் கொடுக்கும் கலாச்சாரத்தை உருவாக்க வேண்டும். இன்ஸ்டாகிராம், யூ டியூப், எக்ஸ், பேஸ்புக் எல்லா இடங்களிலும் சமூகத்தின் நன்மைக்குப் பாடுபடுபவர்களைக் குறித்த பதிவுகளும், நாம் அவற்றைப் பின் தொடர வேண்டும் எனும் அறைகூவலும் தொடர்ந்து இடம் பெற வேண்டும். பள்ளிக்கூடங்கள், கல்லூரிகள், பாட சாலைகள் – எல்லா இடங்களிலும் ஏட்டுக் கல்வியைப் போல நாட்டுக் கல்வியும் பயிற்றுவிக்கப்பட வேண்டும். சமூகத்தின் வீதிகளில் செல்லும் போது செய்ய வேண்டிய கடமைகள் என்னென்ன என்பதை அவர்கள் கற்றுக் கொள்ள வைக்க வேண்டும்.

இத்தகைய பணிகளுக்கும், விழிப்புணர்வுக்கும் திரை நட்சத்திரங்கள், விளையாட்டு வீரர்கள் போன்றோரை பயன்படுத்தலம். அது அதிக பயனளிக்கும்.

இது நம் சமூகம் எனும் சிந்தனை கொள்வோம். நமது மானுட தோழர்கள் வாழவேண்டும் எனும் ஆசை கொள்வோம். நமக்கென்ன என ஒதுங்காமல், நமக்கென போராடக் களம் புகுவோம்.

# ஒலிம்பிக் தீபத்தை ஏந்திய முதல் இலங்கையர் தர்ஷன் செல்வராஜா!



உலகத் தமிழருக்கான அங்கீகாரம் சிறுகச் சிறுக பல வடிவங்களில் உலகமெங்கும் கிடைத்து வருகின்றது.

"தர்சன் செல்வராஜா" பிரான்ஸ் நாட்டில் வாழ்கின்ற அனைத்து தமிழர்களும் அறிந்த தமிழராவார்.

2006 ஆம் ஆண்டு பிரான்ஸ் நாட்டுக்கு வந்தவர், வெதுப்பி தயாரிப்பில் ஈடுபட்டு சிறந்து விளங்கினார், கடந்த ஆண்டு முதாலம் இடத்தையும் பெற்றார். நூறு வருடங்களுக்கு பின்னர் பிரான்சில் ஒலிம்பிக் மெய்வல்லுநர் போட்டிகள் நடைபெறவுள்ளது. அவரது திறமைக்கான அங்கீகாரமாக ஒலிம்பிக் சுடரினை சுமந்து செல்லும் வாய்ப்பு கிடைத்த முதல் ஈழத்தமிழராகின்றார்.

**இதயம் நிறைந்த வாழ்த்துகள் தர்சன்**







# வட்டுக்கோட்டை சிவபூமி தேவர மடம் திறப்பு விழா




## 'திருமுறை ஆடல் ஆற்றுகை' ஒரு சிறப்பான முயற்சி













திருமதி சிறீதேவி கண்ணதாசன்

கடந்த மாதம் 14.07.2024 ஞாயிறு அன்று, சிறப்பாக நடைபெற்றது.

சென்னை உயர் நீதிமன்ற நீதிபதி சிறீ. சிவஞானம் அவர்கள் பிரதம விருந்தினராக கலந்துகொண்டு, தேவர மடத்தினைத் திறந்து வைத்தார்.

அவர் தன் உரையில் யாழ்ப்பாணத்தில் இன்று உள்ளதுபோல் சென்னையில் தமிழும் சைவமும் இன்று உயர்வாக இல்லை. இங்கு பல அர்ப்பணிப்புக்களின் மத்தியில் அவை வளர்ந்து உள்ளது என்றார்.

தலைமை உரையாற்றிய செஞ்சொற் செல்வர் ஆறு திருமுருகன் அவர்கள் பல அரிய சரித்திரத் தகவல்களை குறிப்பிட்டு உரையாற்றினார்.

பல தமிழ் அறிஞர்கள் உரைகளும் இடம் பெற்றது.

வட்டுக்கோட்டை ஞானியார் மடம் என அழைக்கப்பட்ட அமரர் தி. பாலசுந்தரம் அவர்களின் ஒரு நாற்சார வீடு அவரின் விருப்பப்படி, சிவபூமிக்கு அன்னாரின் பிள்ளைகளால் கையளிக்கப்பட்டது.


மேற்படி வீடு அதன் அமைப்பு மாறாமல் புனரமைக்கப்பட்டு, தற்போது சிவபூமி தேவார மடமாக த் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

அன்றைய தினம்

'திருமுறை ஆடல் ஆற்றுகை' நடனம்

பொன்னாலை சந்திர பரத கலாலயத்தின் 24 மாணவர்கள் கலந்து சிறப்பித்தனர்.

நடனங்களை மிகச் சிறப்பாக சிறீதேவி



கண்ணதாசன் அவர்கள் நெறிப்படுத்தியிருந்தார்.

வாய்ப்பாட்டு சற்குணராஜா சர்மா ஜதுர்ஷன், பாடிய தேவாரம் நடனத்திற்கு வேண்டிய பாவத்துடன், அமைந்தது, மாணவர்களின் பாவ வெளிப்பாட்டுக்கு வெகுவாக உதவியது.

24 மாணவர்கள் ஒரே மேடையில் ஆடுவதற்கு உரிய அகலமான மேடை அல்ல. ஆனால் மாணவர்களும், ஆசிரியரும் அந்த மேடையை முழுமையாக பாவித்தும், ஆடல் காட்சிகளை பிரித்து பிரித்து வகைப்படுத்திக் கையாண்டதும் சிறப்பு.

பாவம், தாளம் யாவும் சிறப்பாக இருந்தது. திருமுறை ஆடல் ஆற்றுகை ஒரு சிறப்பான முயற்சி. கலைஞர்களுக்கு வாழ்த்துகள்.

# யாழ்ப்பாணத்து தமிழும் சைவமும் தமிழ்நாட்டில் இல்லையே!

## சென்னை உயர்நீதிமன்ற நீதியரசர் சிவஞானம்

(எம்.நியூட்டன்)

தமிழ்நாட்டில் இவ்வாறான தமிழ் இல்லையே என்று யோசிக்கவைக்கும் அளவுக்கு யாழ்ப்பாணத்தில் தமிழும் சைவமும் தழைத்திருக்கிறது என சென்னை உயர்நீதிமன்ற நீதியரசர் சிவஞானம் தெரிவித்தார்.


தெல்லிப்பழை பிரதான வீதி வட்டுக் கோட்டையில் தி.பாலசுப்பிரமணியம் நினைவாக அவரது குடும்ப உறுப்பி னர்களால் அன்பளிப்பாக வழங்கப் பட்ட இல்லம் புனரமைக்கப்பட்டு சிவ பூமி தேவார மடமாக, கடந்த மாதம் (14.07.2024) திறந்துவைக்கப்பட்டது.

இதில் பிரதம விருந்தினராக வருகை தந்த சென்னை உயர்நீதிமன்ற நீதியரசர் சிவஞானம், சிவபூமி தேவார மடத்தை திறந்துவைத்து உரையாற்றும்போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் உரையாற்றுகை யில்,

இந்தியாவில் தமிழ்நாடு என்று பெயர் இருந்தும், அங்கே தமிழ் இவ்வாறு இருக்காதா என்று யோசிக்கவைக்கிறது. அந்தளவுக்கு யாழ்ப்பாணத்தில் தமிழும் சைவமும் தழைத்திருக்கிறது.





சைவத்துக்கும் தமிழுக்கும் சேவை செய்ய கலாநிதி ஆறுதிருமுருகன் தமிழ் நாட்டுக்கு வருகை தரவேண்டும்.

சாதாரண தொண்டு செய்பவர்கள் விளம்பரங்களுடன் ஓடிக்கொண்டிருக்கி றார்கள். விளப்பரத்துக்காகவே தொண்டு செய்கிறார்கள். ஆனால் சிவபூமி அறக்கட்டளையின் தலைவர் கலாநிதி ஆறுதிருமுருகன் தன்னலம் இல்லாது எவ்வளவோ திருப்பணிகளை செய்து வருகிறார். இத்தகைய பணிகளை மன்னர்கள் செய்யவேண்டிய பணி இவர் சாதாரணமாக செய்துவருகிறார்.

இது இறைவனின் அருள் இல்லாமல் செய்யமுடியாது. இறைவனின் அருள் இவருக்கு உள்ளது.

சைவமும் தமிழும் எல்லோரையும் வாழவைக்கும். அத்தகைய பணி செய்ப வரை யாழ்ப்பாணம் பெற்றுள்ளது. இத் தகைய பணி தமிழகத்தில் இல்லையே. காலமாற்றத்தால் சுருங்கிப்போயுள்ளது. ஆறுதிருமுருகனின் பணி உலகில் பல இடங்களுக்கும் தேவையாக உள்ளது.

இன்றைய தேவார மடம் திறப்பு விழா அவசியமான ஒன்றாகும். எனது பதவி நிலை காரணமாக பல இடங்களுக்கு அழைப்பார்கள். அங்கு சென்றால் பல மொழிகளை பேசுவார்கள். தேவாரங்கள் பாடுவார்கள். அவை சிலவே. ஆனால் இங்கு திருமுறை ஆடல் ஆற்றுகை சிறப் பாக நடைபெற்றுள்ளது.

இந்த மடத்தில் தேவாரத்துடன் ஆடல் ஆற்றுகையும் நடைபெறவேண்டும். இந்த தேவார மடத்தை இந்த பிரதேசத்தை சேர்ந்தவர்கள் பயன்படுத்திக்கொள்ள வேண்டும் என்றார்.

**நன்றி. வீரகேசரி,**
**படங்கள். வெற்றிமணி**

---



# காசு வேண்டாம்! ஏறுங்கள்!! ஊர் சுற்றிக்காட்டுகிறேன்!!!

## (உண்மைச் சம்பவம்)

மாலை 22.06.2024.கொழும்பு காலி வீதியில் பம்பலப்பிட்டி யை நோக்கி நடந்து கொண்டு இருந்தேன். 7 மாடி புடவைக் கடைக்கு அருகே ஒரு அப்பக்கடை.

இப்ப பால ஆண்டுகளாக இனிப்பாக உண்ணவும் பேசவும் எனக்கு உகந்த இடமாக அவ்விடம் அமைந்தது.

நான் அப்பக்கடையை நோக்கி நடந் தவண்ணம் இருந்தேன். ஓட்டோ வில் ஏறி இறங்கவேண்டும் என்ற எண்ணம் துளியும், இல்லை.

நப்பி என்று எடுத்துக்கொண்டாலும் சரி, நடப்பது நல்லது என்ற நம்பிக்கை என்று எடுத்தாலும் சரி.

கீரிச் சென சத்தத்துடன் வலது புறம் ஒரு ஓட்டோ நின்றது.

தமிழில் வாருங்கள் என்ற அழைப்பு வந்தது. திரும்பி பார்த்தேன்,

அவன் ஒரு பேப்பரை காட்டி நீங்கள் வாருங்கள் பெற்றாவை, (கோட்டையை ) சுற்றிக்காட்டுகிறேன். காசே தரவேண்டாம் என்னிடம் ஒரு பெற்றோல் வவுச்சரும் உண்டு வந்தால் போதும் என்றான்.

அவன் அழைப்பில் வர வர அதிகாரம் அதிகமாக இருந்தது. அதிகாரம், அன்பு என மாறி மாறி முகம் இருமுகம் காட்ட, எனக்கு என் முகமும் இரு முகம் காட்ட எத்தனித்தது, ஏன் வம்பு என்ற ஒரே காரணத்திற்காக மட்டுமே .ஒரு முகத்துடன் நிறுத்தி நடந்தேன்.

அவன் ஒரு முறைப்போடு பார்த்த வண்ணம் விலத்திச் சென்றான்.

எனக்கு இலவசமாக கூட்டி செல்கிறேன் என்பதைவிட இன்னும் ஒரு வார்த்தை சொன்னான், நான் தமிழ்பேசுகிறேன், என்னை நம்ப மாட்டீர்களா?

இந்த வார்த்தை கேட்டபின் எனது நெருக்கம் அவனுக்கும் எனக்கும் சற்று குறைய நடந்து கொண்டு இருந்தோம்.

ஒரு கட்டத்தில் நான் போனில் பேசுவ துபோல் பேசிய படி அவனிடம் எனக்கு ஓட்டோ தேவை இல்லை என்றேன்.

எதிர்ப்புறத்தில் யேர்மனியில் இருந்து ஒரு போன் , நான் வெள்ளவத்தை பொலீஸ் நிலையப்பக்கம் போகிறேன்,



என் நண்பனைக்காண என்று உரக்கச் சொன்னேன். ஓட்டோ எதிரில் சமிக்கை விளக்கு, சிவப்பில் இருக்கவும், , பச்சை போலப்பறந்தான். சிலது அவன் கையில் இருந்து காட்டிய வவுச்சர் இந்த சுநன டபைாவியளள ஆக இருக்குமோ.

என்னை வெளிநாட்டில் இருந்து வந் தவன் என்று எப்படிக் கண்டு பிடித்தான்.

அரைக்காச்சட்டையும் இல்லை,

பெரிய பிறாண்ட் சேட்டும் இல்லை.

கையில் ஒரு சொப்பிங் பாக் மட்டுமே, அதுவும், உள்நாட்டு கடைகளில் கிடை த்தது. அட தலையில் தொப்பியும் இல்லை. அப்ப எப்படித்தான் என்னை வெளிநாட்ட வர் என்று கண்டுகொண்டான்.

நேற்று ஒரு நண்பனைச் சந்தித்து நடந் ததை சொன்னேன்.

இப்படி கொழும்பில் பல இடங்களில் வெளிநாட்டவர்களை ஏமாற்றி, ஒதுக்கு புறங்களில் நிறுத்தி இருப்பதை பறித்து விட்டது செல்கிறார்கள். என்றார்.

நல்லவர்களும் உள்ளார்கள் என்ற உண்மை மறுப்பதற்கு இல்லை. ஒரு சிலர் இப்படி.....

**Location**
Stadthalle Kelkhein,
Gagernring 1 65779
Kelkheim (Taunus)
**Date & Time**
24.08.2024- 4PM- Entrance Free

NATURAL PRODUCTS
இயற்கை உணவு வகைகள்
உணவே மருந்து! மருந்தே உணவு!



SAI SHAKTI
பெண்கள் அமைப்பு

# நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்

## ஆரோக்கியம் அளிக்கும் பொருட்கள் அறிமுகம்

## மன அழுத்தத்தை குறைத்து புத்துணர்ச்சி பெறுங்கள்







காலை 10 மணி முதல் மதியம் 2 மணி வரை யோகா வகுப்புகள் மதிய உணவுடன் 50 யூரோ
காலை 10 மணி முதல் மதியம் 2 மணி வரை ரிக்கி ஹீலிங் வகுப்புகள் + 2 வகுப்புகள் மதிய உணவுடன் 200 யூரோ
*அனைத்து வகுப்புகளும் ஆங்கிலத்தில் நடைபெறும்

திரு அமரதாஸ்
அவர்களின்
ஒளிப்பட நூல்
அறிமுக நிகழ்வு

திரு சக்திவேல்
(தமிழ்நாட்டின் வசந்தம்
இயற்கை பண்ணை நிறுவனர்)
அவர்களின்
கோ நம்மாழ்வார்
இயற்கை உளவாண்மை
விழிப்புணர்வு பற்றிய பேச்சு

திரு சுந்தரேசன்
இயன்முறை மருத்துவர்
உடல் இயக்க நிபுணர்
(தமிழ்நாட்டின்
ஆறு புள்ளிகளின்
மாற்றம் நிறுவனர்)

மற்றும்
பல்சுவை
நிகழ்ச்சிகள்..
அனைவரையும்
அன்புடன்
வரவேற்கிறோம்




**SAI NATURAL PRODUCT - NAVA GRAIN KANJI MIX**



- Improves digestion & helps to prevent constipation.
- Low glycemic index
- Soluble fibre improves the absorption of Nutrients into the blood.
- Protects the pancreatic cells & Enhances the primary functioning of pancreas.
- Prevents the fat deposit on the inside walls of the arteris and protects the heart.
- Strengthens the nervous system.
- Improves brain function & Increases energy levels of body.
- Suitable for children and all age groups.

**For more details**

| Location | Date & Time | Contact | Bank details |
| --- | --- | --- | --- |
| Stadthalle Kelkhein, Gagernring 1 65779 Kelkheim (Taunus) | 24.08.2024 4pm Entrance Free | +4915214511090 saiprodukt@gmail.com | Rishnaa Navaneethan DE48 5004 0000 0389 8418 00 commmerz bank |



# காலத்திற்கு காலம் மாறுபடும் கலாச்சாரமும், பண்பாடும்

முற்கால இலக்கியக் கருத்துக்களைத் தற்காலத்தில் ஏற்று நடத்தல் என்பது சாத்தியப்படும் விடயமல்ல. காலமும் நடைமுறைகளும் இவ்வாறு இருந்தன என்பதை வரலாற்றுப் பின்னணியை அறிந்து கற்றுக் கொள்ளலாம். ஆனால், அக்கருத்துக்களை வளருகின்ற சமுதாயத்துக்குத் திணிப்பது என்பது குற்றமுள்ள காரியமாகவே இருக்கிறது. அக்கருத்துக்களை ஆராய்ந்து அதற்கேற்ப காலத்தின் கணிப்பீட்டுடன் பொருத்திப் பார்த்து ஏற்று நடப்பதே சாலச்சிறந்தது.

கால மாற்றத்துக்கும் தொழிட்ப வளர்ச்சிக்கும் ஏற்ப மாறுப்பட கலாசாரப் பின்னணியைத் தற்போது நாம் நோக்கக் கூடியதாக இருக்கின்றது. இது காலத்தின் கட்டாயம். எம்முடைய முன்னோர்கள் இப்படியே வாழ்ந்தார்கள் என்னும் போது அக்கால கட்டத்துச் சூழ்நிலை எவ்வாறு இருந்தது என்பதை அறிய மானடவியலும், வரலாற்றுக் கல்வியும் கற்றிருக்க வேண்டியது அவசியம். "கண்டது கற்கப் பண்டிதனாவான்" என்னும் கருத்துக்கேற்ப ஆழக்கற்று அறிவை வளர்துக் கொண்டால், எதிர்கால சந்ததியின் மனஅழுத்தத்தையும் எம்முடைய மனஅழுத்தத்தையும் குறைக்கக் கூடியதாக இருக்கும்.

காலத்துக்குக் காலம் கலாசாரங்களும் பண்பாடுகளும் மாறுபட்டுக் கொண்டு வருகின்ற நிலைமையை நாம் கண்கூடாகக் காணக்கூடியதாக இருக்கின்றது. காலநிலை, இயற்கை வளங்கள், போன்றவற்றுக்கு ஏற்ப அந்நிலப்பகுதியில் வாழுகின்ற மக்களின் பழக்கவழக்கங்களும், பண்பாட்டு அம்சங்களும் அமைந்திருக்கின்றன. தம்முடைய இருப்பிடங்களை விட்டுப் புலம்பெயர்ந்து வாழுகின்ற மக்கள் தாங்கள் வாழுகின்ற நாடுகளுக்கேற்பத் தம்முடைய கலாசாரத்தை மாற்றி வாழுகின்றார்கள். சூழலும் சுற்றாடலும் மனிதனின் சிந்தனைத் திறனைத் தூண்டுவதுடன் சமூக ஒற்றுமையையும் கலாசாரக் கலப்பையும் ஏற்படுத்துகின்றது.



இந்த நிலைமை புலம்பெயர்ந்த மக்களின் பண்பாட்டு விழுமியங்களை மாற்றியமைக்கின்றது. இம்மக்கள் தாம் பிறந்து வளர்ந்த மண்ணுக்குச் செல்லுகின்ற போது தம்முடைய மாற்றுக் கலாசாரத்தை அங்கும் விதைப்பதை அறியக்கூடிதாய இருக்கின்றது. அறிதல் என்பது அறிவோடு சம்பந்தப்பட்டதே. எனவே கலாசாரம் கால, சூழல், மண்வளம், இயற்கை போன்றவற்றைச் சார்ந்திருந்தால், தாய் மண்ணில் வாழுபவர்கள் புலம்பெயர்ந்த மக்களின் பண்பாட்டு அம்சங்களை ஏற்று நடப்பது என்பது முற்றிலும் தவறாக அமையும். உதாரணமாக குளிர் பிரதேசங்களில் வாழுகின்றவர்கள் இசை துள்ளல் இசையாகவும் மேடை நிகழ்ச்சிகளில் ஆடிப்பாடித் துள்ளித் துள்ளிப் பாடுவதையும் நாம் கண்டிருக்கின்றோம். இது தம்முடைய உடல் வெப்பத்தை அதிகரிக்கச் செய்கின்றது. ஆனால், வெப்பம் மிகுந்த ஆசிய நாடுகளின் இசை கர்நாடக இசையாகவும் ஒரு இடத்தில் அமர்ந்திருந்து பாடும் இசையாகவும் இருக்கும். அவர்கள் குதித்துத் துள்ளி ஆடுகின்ற போது ஏற்கனவே வெப்பம் மிகுதியில் இருப்பவர்களுக்கு மேலும் உடல் வெப்பநிலையை அதிகரிக்கச் செய்கின்றது. அதனால், இயற்கைக்கு மீறி குளிரூட்டியுடன் கூடிய மண்டபங்களில் இசை நிகழ்ச்சியைச் செய்ய வேண்டிய சூழ்நிலை ஏற்படுகின்றது. இவை சமூகவலைத்தளங்கள் கற்பித்த கலாசாரங்களாகக் காணப்படுகின்றன.



**கௌசி சிவபாலன்**
(யேர்மனி)

கைகளை காற்சட்டைப் பைக்குள் வைத்து நடக்கின்ற பண்பு குளிர்நாடுகளில் இருந்து வெப்பக் காலநிலையுள்ள நாட்டு மக்கள் பொருத்தமற்ற முறையில் கற்றுக் கொண்டதாகக் காணப்படுகின்றது. குளிர்காலங்களில் விரல்கள் விறைத்து மஞ்சள் நிறத்திற்கு



வந்துவிடுவது இயற்கை. அதனால், கைகளைக் காற்சட்டைப் பைக்குள் வைத்து நடக்கின்ற வழக்கம் இருக்கின்றது. இது எப்படி வெப்பமான நாடுகளுக்குப் பொருத்தமாக அமையும். காற்றோட்டமுள்ள புடைவையும், வேட்டியும் மறைந்து இறுக்கமான காற்சட்டை எப்படிப் புகுந்தது?

இவ்வாறே திருக்குறளின் பொருத்தமற்ற கருத்துக்கள் காலக்கணப்பீட்டில் ஆய்வு செய்யப்பட வேண்டிய அவசியத்துக்குள்ளாகின்றது.

> **இல்லறவியலிலே வாழ்க்கைத்**
> **துணைநலம் என்னும்**
> **அதிகாரத்திலே**
>
> **தெய்வம் தொழாஅள் கொழுநன்**
> **தொழுதெழுவாள்**
> **பெய் எனப் பெய்யும் மழை**

என்னும் ஒரு குறள் இருப்பது யாவரும் அறிந்தது. சிறுவர்கள் கூடக் கற்கின்றார்கள். மனனம் செய்கின்றார்கள். ஆனால், அதன் பொருள் விளங்கிக் கற்கின்றார்களோ தெரியவில்லை.

> **"பாலெல்லாம் நல்லாவின்**
> **பாலாமோ பாரிலுள்ள**
> **நூலெல்லாம் வள்ளுவர்**
> **செய் நூலாமோ**
> **நூலின் பரிந்துரை எல்லாம்**
> **பரிமேலழகன்,**
> **தெளித்த உரையாமோ தெளி"**

என்று பெருஞ்சித்திரனார் பரிமேலழகர் உரையின் சிறப்புப் பற்றி எழுதியுள்ளார். அந்த பரிமேலழர் பிற தெய்வம் தொழாது தன் தெய்வம் ஆகிய

28 ஆம் பக்கம் பார்க்க...



விளம்பரம் அறிமுகம் செய்யும். தரம் அதை நிலைபெறச் செய்யும்.

03 ஆம் பக்கத் தொடர்ச்சி...

# இலங்கை அரசியலை குழப்பும் ‘22’



அது அவசியமற்றது என உயர் நீதிமன்றமே அறிவித்துவிட்டது. சட்ட நிபுணர்களும் அதனை உறுதிப்படுத்திவிட்டனர்.

இந்த நிலையில்தான் அமைச்சர்களான விஜயதாச ராஜபக்ஷ, மகிந்த அமரவீர ஆகியோர் 22 ஆவது திருத்தம் வரப்போவதில்லை எனத் தெரிவித்திருந்தார்கள். அது குறித்த வா ̇த்தமான அறிவித்தலை வெளியிட வேண்டாம் என்று அமைச்சார் விஜயதாச ராஜபக்ஷ தமது அமைச்சு அதிகாரிகளுக்கு உத்தரவிட்டும் இருந்தார். அவர்கள் அவ்வாறு சொல்லி 24 மணி நேரத்துக்குள் ஜனாதிபதியின் அவசர உத்தரவில் வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுவிட்டது.

ஜனாதிபதித் தேர்தல் செயற்பாடுகள் சூடுபிடித்திருக்கும் நிலையில் அவசரமாக ஜனாதிபதி இதனை வெளியிட்டதன் நோக்கம் குறித்து எதிர்க்கட்சிகள் சந்தேகிக்கின்றன. கட்சித் தலைவர்களின் கூட்டத்திலும் இதற்கு எதிரான கருத்துக்ளே முன்வைக்கப்பட்டிருந்தன.

ஜனாதிபதித் தேர்தலுக்கான அறிவிப்பு உத்தியோகபூர்வமாக வெளியிடவுள்ள நிலையில் ஜனாதிபதித் தேர்தலைப் பிற்போடுவதற்கும் அல்லது தேர்தல் பணிகளை நெருக்கடிக்குள்ளாக்கும் வகையிலும் இந்தச் சட்டமூலம் கொண்டு வரப்படுகிறது என்று எதிர்க்கட்சியினரும், சிவில் அமைப்பினரும் கடும் எதிர்ப்பை வெளிப்படுத்துகின்றனர்.

வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ள 22 ஆவது திருத்த வரைவை நிறைவேற்றுவதற்கு நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை ஆதரவைப் பெறுவதுடன் மக்கள் வாக்கெடுப்புக்கும் செல்ல வேண்டும். ஜனாதிபதித் தேர்தல் நடைபெறவுள்ள நிலையில் ஜனாதிபதியின் பதவிக் காலத்துடன் தொடர்புடைய ஒரு விடயத்துக்குச் சர்வஜன வாக்கெடுப்பு கோரும்போது ஜனாதிபதித் தேர்தலுக்கான பணிகள் நெருக்கடிக்குள்ளாகும்.

இந்தச் சட்டமூலம் நாடாளுமன்றத்துக்குச் சமர்ப்பிக்கப்பட்டதன் பின்னர் 14 நாட்களுக்குள் இலங்கைப் பிரஜைகள் எவரும் சட்டமூலத்தை சவாலுக்குட்படுத்தி உயர்நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்ய முடியும். நடைபெறப் போகும் ஜனாதிபதித் தேர்தலை 22 எந்த வகையிலும் பாதிக்காது என்று தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் கூறியிருக்கின்றார்.

ஜனாதிபதியின் நகர்வுகள் சந்தேகத்துடன் பார்க்கப்படுவதற்குப் பல காரணங்கள் உள்ளன. முதலாவது, கடந்த வருடம் உள்ளூராட்சி மன்றங்களுக்கான நியமனப்பத்திரங்கள் தாக்கல் செய்யப்பட்டு, தேர்தல் திகதியும் அறிவிக்கப்பட்ட பின்னர் நிதி இல்லை என்ற காரணத்தைக் கூறி அது இறுதி நேரத்தில் ஒத்திவைக்கப்பட்டது.


அப்போது, ஐ.தே.க. மிகவும் பலவீனமான நிலையில் இருந்தது. அது மட்டுமன்றி, ஜே.வி.பி, மற்றும் சஜித் அணி என்பன பாரிய வெற்றிபெறும் என்ற மதிப்பீடுகளும் உள்ளூராட்சி மன்றத் தேர்தல் தவிர்க்கப்பட்டமைக்கு காரணம். அடுத்து வரக்கூடிய தேர்தல்களிலும் அது பாதிப்பை ஏற்படுத்தும் என ரணில் அப்போது கணித்திருக்கலாம்!

இப்போதும் தேர்தல் கள நிலைமைகள் எவ்வாறுள்ளன என்பது திட்டவட்டமாகக் கூறக்கூடிய நிலை இல்லை. சஜித் அணியை ரணிலுடன் இணைப்பதற்காக சர்வதேச சக்திகள் சில முன்னெடுத்த முயற்சிகள் வெற்றிபெறவில்லை.

அதனைவிட, ராஜபக்ஷக்களுடன் இணைந்தால் தமிழ், முஸ்லிம், மலையக வாக்குகள் கிடைக்காது. ராஜபக்ஷக்களை பகைத்தால் சிங்கள வாக்குகள் கிடைக்காது என்ற தர்ம சங்கட நிலை ரணிலுக்கு. இதனால், தேர்தலை தள்ளிவைப்பதற்கு ரணிலுக்குள்ள இறுதியான துரும்புச் சீட்டு 22 என்கின்றார்கள் எதிரணியினர்.

ஆனால், 22 இன் பக்கம் அனைவரது கவனத்தையும் திருப்பிவிட்டு மற்றொரு உபாயத்துடன் ஜனாதிபதி செயற்படுகின்றாரோ என்பதும் தெரியவில்லை. எவ்வாறிருந்தாலும் ரணிலுக்கு இது ஒரு வாழ்வா சாவா என்ற போராட்டம்தான். இந்த அக்கினிப் பரீட்சையை அவர் எவ்வாறு எதிர்கொள்ளப் போகின்றார்?




# என் அன்பு மக்களே...

எங்கள் தேவஸ்தானத்தில் இயங்கும் தூர்க்காபுரம் மகளிர் இல்லத்தில் சிறு வயது தொடக்கம் வளர்ந்த பிள்ளை, திருமணம் முடித்து தனது வயிற்றில் வளரும் பிள்ளையை பெற்றெடுக்க கொழும்பில் அமைந்துள்ள தனியார் வைத்திய சாலைக்கு சென்றாள்.

அங்கு அவளது வயிற்றில் வளரும் பிள்ளையை சத்திரசிகிச்சை செய்தே பெற்றெடுக்க வேண்டும் என வைத்தியர்கள் தெரிவிக்க அதற்குரிய பணத்திற்கு எங்கு போவது என்ற ஏக்கத்துடன், எனக்கு தொலைபேசியில் அழைத்து ஐயா... எனது மருத்துவ செலவிற்கு உங்களால் முடிந்தால் பணம் அனுப்புங்கள் உங்களை விட்டால் எனக்கு கேட்க வேறு யாரும் இல்லை என அழுதாள்.

நான் மறுகணமே எனது சொந்தப் பணத்தை அந்தப் பிள்ளைக்கு அனுப்பி வைத்து, என் அன்பு மகளே எங்கள் தூர்க்கை அம்பாள் தந்த குழந்தைச் செல்வத்தை கவனமாகப் பெற்று குறைவின்றி சிறப்புடன் வாழ்வாயாக என்று வாழ்த்தினேன்.

திருமணம் முடித்து இல்லத்தை விட்டு சென்றாலும் எங்களுடன் வளர்ந்த பிள்ளைகளுக்கு யார் துணை? எங்களைத்தான் உறவுகளாக எண்ணி இல்லத்தில் வளர்ந்த பிள்ளைகள் உரிமையுடன் உதவி கேட்பார்கள்.

காலை தேவஸ்தானத்திற்கு வந்தால் அம்பாளை வணங்கி திருமண வயதை எட்டியுள்ள எங்கள் பிள்ளைகளுக்கு நல்ல வழிகாட்டம்மா என்று மண்றாடி விட்டுத்தான் எனது ஏனைய பணியை செய்கின்றேன்.

என்னை வந்து சந்தித்து உங்களிற்கு என்ன உதவி செய்ய வேண்டும் என்று கேட்பவர்களிடம், எங்கள் பிள்ளைகளுக்கு ஏதாவது செய்யுங்கள் என்றுதான் கேட்பேன்.

எங்கள் பிள்ளைகளின் விருப்பம் இல்லாமல் நான் இதுவரை ஒரு கருமம் கூட நிறைவேற்றியதில்லை.

எங்கள் தேவஸ்தானத்தின் தெற்கு பக்கமாக உள்ள கோபுரத்தை கட்டுவதற்கு என்னுடன் மிகவும் நல்லுறவை பேணுகின்ற வைத்தியர் ஒருவர் 32 இலட்சம் ரூபா பணத்தை தந்தார்.

சில தினங்களிற்கு பின்பு எங்கள் இல்லப் பிள்ளைகளில் ஒருவரை தனது உறவினர் ஒருவருக்கு திருமணம் முடித்து வைக்க என்னிடம் விரும்பம் கேட்டார்.

நாங்கள் எங்கள் அம்பாளிடம் பூக்கட்டிப் பார்த்துத்தான் முடிவு சொல்வோம் என்று சொல்லி அனுப்பி வைத்தேன். மறுநாள் நாங்கள் பூக்கட்டிப் பார்த்தோம் அம்பாள் நல்ல பதில் சொல்லவில்லை அதனால் அந்த வைத்தியரிடம் எங்கள் அம்பாள் சம்மதிக்கவில்லை நீங்கள் வேறு இடம் பாருங்கள் என்று பதில் சொல்லி அனுப்பி வைத்தேன்.

எங்கள் தேவஸ்தானத்திற்கு 32 இலட்சம் ரூபா தந்தவர் என்பதற்காக எங்கள் இல்லப் பிள்ளைகளை அம்பாளின் விரும்பத்திற்கு மாறாக நாங்கள் திருமணம் செய்து வைக்கவில்லை.

எங்கள் பிள்ளைகளுக்கு ஜாதகம் இல்லை அவர்களின் அம்மாவைத் தெரியாது அம்பாவைத் தெரியாது உறவுகளைத் தெரியாது.

ஜாதகம் இல்லாத பிள்ளைகளுக்கு முடிவு சொல்பவளாக எங்கள் தூர்க்கை அம்பாளே உள்ளாள். அவள் சம்மதத்துடன் 17 திருமண காரியங்களை நான் நிறைவேற்றியுள்ளேன்.

திருமண காரியங்களை கவனிக்கும் சிவாச்சாரியார் பெண் வீட்டாரின் விபரங்களை கேட்பார் நான் ஆறுதிருமுருகன் என்று ஒரு சிறு பேப்பரில் எழுதிக் கொடுப்பேன்.

நீங்கள் என்னுடைய பெயரைச் சொல்லுங்கள் நான்தான் பெண் வீட்டாரின் உறவுக்காரன் என மகிழ்ச்சியோடு சொல்லுவேன்.

இதைப் பார்த்துக் கொண்டிருக்கும் எங்கள் பிள்ளைகள் எங்கள் தலைவர் ஐயாதான் எங்கள் உறவுக்காரர் என பெருமகிழ்சியடைவார்கள்.

திருமணப் பத்திரிகை அடிக்கும்போது திருமண நாட்கருமங்கள், சுபநேரங்கள் தொடர்பான விபரங்களை எழுதிக் கொண்டு வந்து,

திருமணப் பத்திரிகையிலே பெண் வீட்டாரின் பெயர் முகவரி போட வேண்டும் எதை எழுதுவது என்று கேட்பார்கள்.

ஆறுதிருமுருகன், தூர்க்கா தேவி தேவஸ்தானம், தெல்லிப்பழை என எழுதிக் கொடுப்பேன்.

எங்கள் பிள்ளைகளுக்கும் எனக்குமான உறவு என்ன என்பதை எங்கள் பிள்ளைகளும் எங்களை நல்வழிப்படுத்துகின்ற எங்கள் கருணை நிறைந்த தாயாகிய அம்பாளும் நன்கறிவாள்.

வெளிநாட்டில் இருந்து வருகை தந்த ஒருவர் எங்களுக்கு தெரிந்த பெடியன் ஒருவனுக்கு இங்கு உள்ள அநாதைப் பிள்ளை ஒன்றை திருமணம் செய்து வைக்க விரும்புகின்றோம் என்று என்னிடம் தெரிவித்தார்.

கோபத்தோடு எழுந்து நின்று நீங்கள் கேட்கும் அநாதைப் பிள்ளைகள் என்று இங்கு யாரும் இல்லை வேறு இடம் சென்று பாருங்கள் என்று பதில் சொன்னேன்.

அநாதைகள் என்று எங்கள் தேவஸ்தானத்தில் எவரும் இல்லை. எங்கள் பிள்ளைகளுக்கு உறவுக்காரர்களாக நாங்கள் இருக்கின்றோம்.

பிரதேச செயலகம் நடாத்திய நடமாடும் சேவை ஒன்றிலே எங்கள் இல்லப் பிள்ளை ஒருவருக்கு உத்தேச வயது பிறப்பு அத்தாட்சிப் பத்திரம் எடுக்க வேண்டும். உறவுக்காரர்களின் விபரங்களை கேட்டார்கள் நான் எனது விபரங்களை எழுதிக் கொடுத்தேன். இந்த ஆண்டு எங்கள் தேவஸ்தானத்தில் நடைபெற்ற பட்டிப் பொங்கல் விழாவின் போது என்னை வந்து சந்தித்த ஒரு பெண் ஒருவர்,

எனது மகன் வெளிநாட்டில் உள்ளான் அவனுக்கு நாங்கள் ஒரு திருமணம் செய்து வைத்தோம் ஆனால் வெறும் 8 மாதத்திலேயே அவர்கள் பிரிந்து விட்டார்கள்.

என்னுடைய மகன் கொஞ்சம் குழப்படிதான் இவனைத்திருத்த என்ன வழி என்று யோசித்து கொண்டிருந்தேன்.

என்னுடைய உறவுக்காரர் ஒருவர் சொன்னார் தூர்க்கா தேவி தேவஸ்தானத்தில் வளர்கின்ற பிள்ளைகள் நல்ல ஒழுக்கமான குணமான பிள்ளைகள். அதில் ஒன்றைத் திருமணம் முடித்து வைத்தால் உங்கள் மகன் திருந்துவான் அதனால் ஒரு பிள்ளையை பார்த்து தேர்ந்தெடுக்க முடியுமா என என்னிடம் வந்து கேட்டார்.

கெட்டுப் போன உங்கள் பிள்ளையை திருத்த நாங்கள் இங்கு இல்லம் நடத்தவில்லை.

எங்கள் அம்பாள் எங்கள் பிள்ளைகளுக்கு தாயானவள் அவள் சம்மதம் இல்லாமல் நாங்கள் எதுவும் செய்ய மாட்டோம்.

எத்தனை வருடங்கள் சென்றாலும் எங்கள் பிள்ளைகள் அம்பாளின் நிழலில் எங்களுடன் வாழட்டும் நீங்கள் வேறு இடம் சென்று

30 ஆம் பக்கம் பார்க்க...

# பிரிட்டன் பாராளுமன்ற தேர்தலில் உமா குமரன் வெற்றி பெற்றார்



இலங்கை வம்சாவளி தமிழரான இவர் லேபர் கட்சி சார்பில் Stratford and Bow நாடாளுமன்ற தொகுதியில் தேர்தலில் போட்டியிட்டு வெற்றி பெற்றுள்ளார். அந்த கட்சி பிரிட்டனில் சுமார் 14 ஆண்டுகளுக்கு பிறகு ஆட்சி அமைக்கிறது.

அவர் போட்டியிட்ட தொகுதியில் மொத்தம் 54.18 சதவீத வாக்காளர்கள் தங்களது வாக்குகளை செலுத்தினர். அதில் 19,415 வாக்குகளை உமா குமரன் பெற்று வெற்றி பெற்றுள்ளார். அவரை எதிர்த்துப் போட்டியிட்ட கன்சர்வேட்டிவ் கட்சி வேட்பாளரான கேன் பிளாக்வெல் 3,144 வாக்குகள் மட்டும் பெற்று 4-வது இடம் பெற்றார்.

உமா குமரனின் பெற்றோர் இருவரும் இலங்கையை சேர்ந்தவர்கள்,1980-களில் உள்நாட்டு போரின் போது பிரிட்டன் நாட்டில் அவர்கள் குடியேறி உள்ளனர். அங்குள்ள குயின் மேரி பல்கலைக்கழகத்தில்உமா படித்துள்ளார்.

தற்போது ஸ்ட்ராட்ஃபோர்ட் மற்றும் போவில் வசித்து வருகிறார். மொத்தமுள்ள 650 இடங்களில் தொழிலாளர் கட்சி 410 இடங்களிலும், ரிஷி சுனக்கின் கன்சர்வேட்டிவ் கட்சி 119 தொகுதிகளிலும் வெற்றி பெற்றுள்ளது. பிற கட்சிகள் 112 இடங்களில் வெற்றி பெற்றுள்ளன.



மாணிக்கவாசகர் வைத்திலிங்கம்



# 'நாளைய மாற்றம்' முன்னோட்டப் பார்வை...

தயாநிதி தம்பையா

22.06.2024 ஜேர்மன் டோர்முண்ட் மாநாகரில் "நாளைய மாற்றம்" எனும் முழு நீளத்தரைப்படத்தின் முன்னோட்டம் திரை யிடப்பட்டது.

ஆரம்பகாலத்தில் மேடை நாடகங்கள் பின்னர் "சலசலப்பு" எனும் முழு நீளத்தரைப் படம் பின்னர் குறும்படங்கள் தொடர்ந்து "நாளைய நாம்" எனும் நெடும் தொடர் 65 வாரங்களாக பல்வேறு "ரி" இணையத் தளங்களில் காட்சிப் படுத்தப்பட்டு பல்லா யிரம் பார்வையாளர்களை தனதாக்கிக் கொண்ட ஜேர்மன் வாழ் திருமதி சிபோ சிவகுமாரன் நாளைய மாற்றம் எனும் திரைப் படத்தினை வெற்றிகரமாக இயக்கி முடித்துள்ளார்.

இத்திரைப் படத்தினை பிரான்ஸ் வாழ் ஈழக்கலைப் பிரியன் டாக்டர் நாகலிங்கம் பாலச்சந்திரன் எனும் தொழில் அதிபர் மற்றும் ஜேர்மன் வாழ் தொழில் அதிகர் சோம சுந்தரம் தங்கராஜா தயாரித்து இருக்கின் றார்கள்.

தாயகம் ஜேர்மன் பிரான்ஸ் என நூற்று க்கும் மேற்பட்ட நமது கலைஞர்கள் பங்கேற் றுள்ளார்கள் என்பது இதின் மிகச் சிறப்பு.

மூன்று இசையமைப்பார்கள் மூன்று பாடல்களுக்கு இசை அமைத்திட கதை தரைக்கதை வசனம் இயக்கம் படத்தொகுப்பு இசைக்கோர்வையோடு அனைத்து தொழில் நுட்ப நுணுக்கங்களிலும் திருமதி சிபோ சிவகுமாரனே பங்காற்றி இருப்பது ஆச்சரியம்.

ஒளிப்பதிவினை சிவஞானம் சிவகுமாரன் அத்துடன் தாயகத்தில் லக்ஸ்மன் மற்றும் பிரியன் மேற்கொள்ள வெற்றிகரமாக முழு நீளத் திரைப்படம் நிறைவுக்குள் வந்தருப் பது கண் கூடாகும்.

இப்படத்தின் முன்னோட்டக் காட்சிகளை காண அரங்கம் நிறைந்த மக்கள் வருகை தந்திருந்தமையை நிகழ்வுக்கு தனிச்சிறப் பென்றே கூறலாம்.

மூன்று நிமிட முன்னோட்டக் காட்சி பார்வையாளர்களை கட்டிப் போட்டிருந் தமையை உணரக் கூடியதாக இருந்தது. துல்லியமான ஒலி ஒளிப்பதிவுடன் திரையில் தோன்றிய கலைஞர்களின் நடிப்பும் வசன ங்களும் அப்படத்தினை பார்க்க வேண்டும் என்ற ஆவலை ண்டியிருப்பதை அங்கு உணர முடிந்தது.


மண்ணின் அவலங்களையும் புலம் பெயர்ந்த மண்ணில் அன்றாடம் சந்திக்கும் வலிகளையும் கதைக் களங்ளோடு காட்சி ப்படுத்தி இருப்பது நாளைய மாற்றம் எனும் திரை விருந்துக்கு மகுடம் எனலாம்.

இவ்வரிய முயற்சி ஈழத்திரை ஆர்வலர் களின் திரைப்பசிக்கு இனிய விருந்தாகும் என்பதில் மாற்றுக் கருத்தில்லை.

வெகு விரைவில் உலகத் திரை அரங்குக ளை அலங்கரிக்க வருகின்ற திகதி அறிய த்தரப்படும்.










குறும் கதை

# கள்ளனும் பொலிசும்

கே.எஸ்.சுதாகர்
அவுஸ்திரேலியா




மனம் ஏதோ சிந்தனையில் லயித்திருக்க, கார் தன் பாட்டில் போய்க் கொண்டிருந்தது. வடக்கு மெல்பேர்ணில் வேலை முடிந்து வீடு திரும்பிக் கொண்டிருந்தேன்.

இரவு இரண்டுமணி. தெரு வெறிச்சோடிப் போய் இருந்தது. நன்றாகக் குடித்துவிட்டிருந்த ஒருவன் வீதியின் நடுவே நின்று தள்ளாடிக் கொண்டிருந் தான். கதவுகளை உட்புறமாகத் தாழிட்டுக் கொண்டேன். வேகத்தைக் குறைத்து ஓரமாகக் காரைச் செலுத்தும் போதுதான், எனக்குப் பின் னாலே ஒரு சிகப்புக்கார் வருவதைக் கண்டு கொண்டேன்.

அந்தக் கார் என்னை நெடுநேரம் பின்தொட ர்ந்து வந்து கொண்டிருந்தது. இந்த இரவு நேரப் பின்தொடர்தல் சிலவேளைகளில் ஆபத்தையும் கொடுக்கலாம். மீண்டும் ஒரு முறை அவனை நோட்டம் விட்டேன். வாட்டசாட்டமான ஒரு வெள்ளைக்காரன். எவனாக இருந்தாலென்ன? நிறையவே கொள்ளைக்காரன் – குடிகாரன் – குடுக்காரன் – கொலைகாரன் கதைகள் கேள்விப் பட்டிருந்தேன்.

அந்த இடத்தில், ‘பலறாற்‘ வீதியில் பயணம் செய்யக்கூடிய அதிகூடிய வேகம் மணிக்கு 80 கிலோமீட்டராகும். இந்த வேகத்தைத் தணித்து 50 இற்குக் கொண்டுவந்தால் அவனை சலிப்பூட்டச் செய்யலாம். ஆனால் அவன் தொடர்ந்தும் என் பின்னாலேயே வந்து கொண்டிருந்தான். வீதியில் மூன்று பாதைகள் இருந்தும், அவன் இப்படி என்னைப் பின்தொடர்வது எனக்கு அவன்மீது சந்தேகத்தைக் கொடுத்தது.

புற்ஸ்கிறேய் வைத்தியசாலை வந்தது. இந்த இடமெல்லாம் எனக்கு அத்துப்படி. அடிக்கடி வைத் தியசாலை போய்வந்த அனுபவம். இந்த இடத்தில் காரை பானாப்படச் (ப்) செலுத்தி மீண்டும் ‘பலறாற்‘ வீதிக்கு எடுத்தால், அந்தக் காலதாமதத்தில் அவன் என்னை விட்டு முந்திப் போய் விடுவான். காரை எந்தவித சிக்னலும் இல்லாமல் வெட்டித் திருப் பினேன். என்னுடைய வெட்டுதலில் அவன் சற்றுத் திணறிப் போனான். பின்னர் காரை வைத்திய சாலை இருக்கும் பக்கம் மெதுவாகச் செலுத் தினேன். மீண்டும் ‘பலறாற்‘ வீதியில் எடுக்கும் பொழுதுதான் – அவனும் என்னைத் தொடர்ந்து மெதுவாக பானாப்பட‘ வருவதை அவதானித்தேன்.

பயம் பிடிக்கத் தொடங்கியது. எண்பது ஓடக் கூடிய வீதியில் மணிக்கு நூறு என்ற வேகத்தில் ஓடத் தொடங்கினேன். இனி என்ன செய்வான் பார்க் கலாம்? ஆனால் ஒவ்வொரு முறையும் பாழாய்ப்போன சிக்னலில் நிற்க வேண்டிய தாயிற்று. அப்படி நிற்கும்போது அவனும் பின்னாலே வந்து விடுகி ன்றான்.

அடுத்து வந்த சிக்னலில், நாலா பக்கமும் வேறு வாகனங்கள் இருக்கவில்லை. அப்படியே சிக்னலில் நிற்காமல் – ரெட் லைற்றில் – அதே வேகத்தில் எடுத்துக் கொண்டேன். அவனும் சிக்னலில் நிற் காமல் வேகவேகமாக வந்து கொண் டிருந்தான். கார் – மெயிட்ஸ்ரோன், பிறேபுறூக், சண்சைன், ஆடியர் என்ற இடங்களிலெல்லாம் அதே நூறு வேகத்தில் ஓடி, நான் இருக்கும் இடமான டியர்பார்க்‘கை அடைந்தது. உள்ளேயிருக்கின்ற குறுக்குப் பாதை களிலெல்லாம் காரை வெட்டி வெட்டி எடுத்தேன். அவனைக் காணவில்லை.

வீடு வந்ததும் றிமோற்கொன்ரோலினால் கராஜின் கதவைத் திறந்து உள்புகுந்தேன். மீண்டும் கராஜின் கதவை மூடும்போது வீட்டு வாசலில் ஒரு கார் வந்து வேகமாக பிரேக் போட்டுநின்றது. உடனே உள்ளேஎரிந்து கொண்டிருந்த லைட்டை அணைத்தேன். சற்றுநேரம் ஓசைப்படாமல் உள்ளே நின்றேன். நெஞ்சுதிக் குத்திக்கென்றது. சற்று நேரத்தில் கராஜின் கதவை அவன் தட்டினான். நான் கராஜிற்குள்ளிருந்து வீட்டிற்குள் போகும் கதவைத் திறந்து கொண்டு உள்ளே போனேன்.

உள்ளே மனைவியின் காதிற்குள் விஷயத்தை மெதுவாகச் சொன்னேன். வீட்டு விளக்குகள் எல்லாவற்றையும் பளீரென எரியவிட்டோம். ஏறக்குறைய கத்துவதற்கு ரெடி. அவன் வீட்டின் முன் கதவைத் தட்டி “நான் பொலிஸ்“ என்றான். ‘எப்படி அவனை நாம் நம்புவது?‘ இதுவரையும் ஒரு கள்ளனைப் போல என்னைப் பின்னாலே துரத்தியவனை எப்படி நான் பொலிஸ் என நம்புவது?

“எவனாக இருந்தாலும் காலையில் வா!“ என்றேன் நான்.

சொல்லிவிட்டு ஜன்னல் திரைச் சீலையை மெல்ல விலக்கி அவன் போய் விட்டானா எனப் பார்த்தேன். ஏதோ ஒரு சிறுபேப்பரில் பேனாவால் கிறுக்கி எழுதி எமது தபால்பெட்டிக்குள் போட்டுவிட்டுப் புறப்பட்டுச் சென்றான் அவன். மேலும் கொஞ்சநேரம் தாமதித்துவிட்டு தபால்பெட்டிக்குள் போட்டிருந்த துண்டை எடுத்து வந்தேன்.

கூடிய வேகத்தில் ஓடியது, சிக்னலில் நிற்காமல் ‘ரெட்‘ லைற்றில் எடுத்தது போன்ற பல்வேறு காரணங்களிற்காக தண்டம் அறவிடப்பட்டிருந்தது. அவுஸ்திரேலியாவிற்கு வருமானத்தை ஈட்டித்தரும் அந்தத் தொழிலில் கள்ளனும் அவனே பொலிசும் அவனே!




## இலங்கை ஜனாதிபதி தேர்தல் குறித்து வெளியான முக்கிய அறிவிப்பு!

2024ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தல் நடைபெறும் திகதி மற்றும் வேட்புமனுக்களை ஏற்றுக்கொள்ளும் திகதி குறித்த வர்த்தமானி அறிவித்தலை இலங்கை தேர்தல்கள் ஆணைக்குழு வெளியிட்டுள்ளது.

இதன்படி, ஜனாதிபதித் தேர்தல் 2024 செப்டெம்பர் 21 ஆம் திகதி நடத்தப்படும் என்றும், வேட்புமனுக்கள் 2024 ஆகஸ்ட் 15 ஆம் திகதி ஏற்றுக்கொள்ளப்படும் என்றும் வர்த்தமானி அறிவித்தலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதியின் பதவிக்காலம் நவம்பர் 17, 2024 இல் முடிவடைகிறது என்றும், ஜனாதிபதித் தேர்தலுக்கான வாக்கெடுப்பு ஒரு மாதத்திற்குக் குறையாமலும், இரண்டு மாதங்களுக்கு முன்னரே பதவிக்காலம் முடிவடைவதற்கு முன்னரே நடத்தப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.



# இக்கரைக்கு அக்கரை பச்சை

இன்றைய காலகட்டத்தில் பலரும் தம் வாழ்வில் தமக்கென அமைந்துள்ள நல்லன குறித்துத் திருப்திப்படுவதை விடவும் பிறரிடம் இருப்பவனவெல்லாம் தம்மிடம் இல்லையேயெனக் கவலை கொள்பவராகவே உள்ளனர்.மனிதர்களுக்கு இயல்பாகவே தம்மிடம் இல்லாதன குறித்தே அதிகம் சிந்தித்து வருந்தும் பழக்கம் உள்ளது.

நமக்குக் கிடைத்தவற்றைக் கொண்டு வாழ்வது எளிதானதுதான்.அடுத்தவர்கள் போல் வாழ முயற்சிக்கும்போதுதான் வாழ்க்கை கடினமானதாக மாறுகிறது.

இல்லாதவற்றைக் குறித்து அலட்டிக் கொள்வோருக்கு எப்போதும் வாழ்வில் முழுமை கிட்டாது. இருப்பதைக் கொண்டு முழுமை காண்பவர்களுக்கு நிம்மதியென்பது தூரமில்லை.

எப்படி நாம் மற்றவர்களைப் பார்த்து அவர்கள் போல் வாழ எண்ணுகிறோமோ அதே போல்தான் அவர்களும் நாம் வாழும் வாழ்வையோ் பிறர் வாழும் வாழ்வையோ வாழ ஆசை கொள்வார்கள். நாம் வாழும் வாழ்க்கை யாரோ ஒருவருக்குக் கனவாக இருக்கிறது அத்தகைய ஒரு சிறந்த வாழ்வை நாம் வாழ்கிறோம் என்பதை உணர்ந்தவர்களால் மட்டுமே வாழ்வின் நிறைவை அடைய முடியும்.

எனக்குத் தெரிந்த ஒருவர் தன்னுடைய நிறுவனமொன்றின் பொறுப்புக் குறித்து வருந்துவார். மற்ற தொழிலாளர்களைப் போலத்தன்னால் ஓய்வெடுக்கவோ, நினைத்தவுடன் விடுமுறையில் செல்லவோ முடியாது என்பது அவர் கவலை. அதே நிறுவனத்தில் பணியாற்றும் தொழிலாளிக்கோ முதலாளி போல் வசதியான வாழ்வில்லை என்பது குறித்துக் கவலை. இதில் இருவருமே அவரவருக்குக் கிடைத்த வாழ்வில் ஏதோவொரு விதத்தில் கொடுத்து வைத்தவர்கள். ஆனால் ஒப்பீடு



செய்து தம்மைத் தாழ்த்திக்கொண்டு பிறர் வாழ்வையெண்ணி ஏங்குகின்றனர்.

பெரும்பாலானோருக்குத் தம்மை விடப் பிறர் நன்றாக வாழ்வதால் நிம்மதியின்மை, மன அழுத்தம் ஆகியன

வருகிறது. அவர்கள் போல் வாழ எண்ணங்கொண்டு உறவுகளைத்தொலைத்து, நிம்மதியை இழந்து, கடன் சுமைகளைக் கூட்டிக்கொள்கின்றனர்.

சமூகத் திணிப்புகளும் இதற்கு ஒரு காரணமாகும். தம் பிள்ளைகள் பிறரைப் போல வாழ வேண்டுமென குடும்பத்தினரும் வற்புறுத்துகின்றனர்.இதனால் அவர்களும் கடிவாளம் கட்டிய குதிரைகளெனப் பிறர் வாழும் வாழ்வைத் தாமும் வாழும் நோக்கில் ஓடுகின்றனர். உறவினரொருவர் வீடு கட்டினால் தாமும் கடன்பட்டு அதைச் செய்தேயாக வேண்டுமென எண்ணுகின்றனர்.உறவினர்கள் செய்யும் ஆடம்பரங்களைத் தம் குடும்பங்களிலும் செய்ய வேண்டுமெனக் கடன் பட்டு நிறைவேற்றி நிம்மதியை இழக்கின்றனர்.

வாழ்க்கையில் மனநிறைவுடன் இருக்க வேண்டுமானால், நம்மிடம் உள்ளவற்றில் மகிழ்ச்சியடையப் பழகப் வேண்டும். தேவையானவற்றில் எம்மை விட நன்றாக இருப்பவர்களைப் பின்பற்றுவதில் தவறில்லை ஆனால் தேவையற்ற ஆடம்பரங்களிலோ, வாழ்க்கை முறையிலோ தமக்குக் கிடைக்காதவற்றை



பொலிகையூர் ரேகா
(இங்கிலாந்து)



நினைத்து வருந்தி அதற்காகத் தம் நிம்மதியைத் தொலைப்பது முட்டாள்தனமானது. ஒருவன் பூங்கா ஒன்றில் அமர்ந்தபடி வருவோர் போவோரைப் பார்த்தபடி இருந்தான். அவனருகில் வந்து இருந்தவரின் கால்களில் இருந்த விலையுயர்ந்த காலணியைப் பார்த்தவன் விலை குறைந்த கிழிந்து தைக்கப்பட்ட தன் காலணியைப் பார்த்து மிகவும் கவலைப் பட்டுக்கொண்டிருந்தான். அவனைக் கடந்து சென்ற ஒரு சக்கர நாற்காலியில் கால்களே இல்லாமல் சென்ற மனிதனைக் கண்டு தன்னைத் தேற்றிக்கொண்டு தனக்குக் கால்களாவது உள்ளதே என்ற மகிழ்ச்சியில் வீடு சென்றான்.

அது போல்தான் பலரும் மற்றவர்களோடு ஒப்பிட்டுப் பார்த்து வருந்தி அவை தம் வாழ்விலும் கிடைக்க வேண்டுமென எண்ணுகின்றனர். அப்படித் தம்மை வருத்திக்கொள்வதற்குப் பதில் தாம் வாழும் வாழ்க்கை இன்னொருவரின் கனவு வாழ்க்கை என்பதை உணர்ந்து அது தனக்குக் கிடைத்ததற்காய் இறைவனுக்கு நன்றி கூறப் பழகினால் நிறைவும் நிம்மதியும் நிலைக்கும்







விளம்பரம் அறிமுகம் செய்யும். தரம் அதை நிலைபெறச் செய்யும்.



# தாய்மண்ணில் புத்தகங்கள், வாசிப்பு, பரவலாக்கல், செயற்திட்ட அங்குரார்ப்பண நிகழ்வு













மேற்படி நிகழ்ச்சி கடந்த 21.06.2024, வெள்ளிக்கிழமை ஆரம்பித்து, சனிக்கிழமை, ஞாயிறு, என 3 தினங்கள் தொடர்ந்து நடைபெற்றன.

நிகழ்ச்சிகளில் தமிழ், சிங்கள படைப்பாளிகளும், கலந்து சிறப்பித்தனர். தமிழகத்தில் இருந்து பவா செல்லத்துரை, காலச்சுவடு ஆசிரியர் கண்ணன், அவர்களும், தாய்மண்ணில் இருந்து பேராசிரியர் சி. மௌனகுரு அவர்களும் கலந்து சிறப்பித்தனர்.

பேராசிரியர் சு.வித்தியானந்தன், அவர்கள் பற்றிய நினைவு பேருரை நிகழ்த்தினார். தொடர்ந்து சு.வித்தியானந்தன் அவர்களது இராவணன் கூத்தில் ஒரு பகுதியும், நொண்டி நாடகத்தில் ஒரு பகுதியும், வடமோடி, தென்மோடி என வகை வகையா பாடிக்காட்டினர். மேளம், ஆர்மோனியம், என பல வாத்தியங்கள் மத்தியில் பாடல்கள் எங்கள் முதுசம் என்பதுபோல் மனதுடன் ஒட்டிக்கொண்டன.

பேராசிரியரும் அவர்களுடன் பாடியவர்கள் அசத்தினர். குறுகிய கால இடைவெளியில் பெற்ற பயிற்சியுடன் வீணை வித்தகி சுபாஷினி பகீரணவன் அவர்கள் பேராசிரியருடன் இணைந்து கலக்கினார்.

காலச்சுவடு ஆசிரியர் தன்னை தமிழகத்தவர் எவரும் பெரிதும் கண்டுகொள்ளாத போதும், ஈழத்தமிழர் தாம் வாழும் இடங்களின் தன்னை வரவேற்று, இணைந்து பணிபுரிகின்றனர் என்றார். ஈழத்தவர்கள் தமிழக படைப்புகளுக்கு, மட்டுமல்ல சினிமாவுக்கும், கைகொடுப்பது அவர்களே. ஈழத்தமிழர்களுக்கு அன்றும் இன்றும் கைகொடுப்பது யார் என்ற கேள்வியும் உண்டு. நூல்களில் விற்பனையும் கணிசமான அளவு இடம் பெற்றது. மதிய உணவும் வழங்கப்பட்டது. பௌசி அவர்கள் இங்கிலாந்து, சுவிஸ், இலங்கை என பல நாடுகளிலும் இந்நிகழ்ச்சியை வெற்றிகரமாக நடத்தி முடித்துள்ளார்.

**நிகழ்ச்சி தொகுப்பு.**
**துஷ்சந்தி சிலுவைதாஸ்.**
**படங்கள்: வெற்றிமணி**

---



# தங்களை நியாயப்படுத்திக் கொள்வதிலேயே காலம் கரைகிறது



தீபா ஸ்ரீதரன்
(தைவான்)

மனிதர்கள் தங்களுக்குத் தானே தங்களை நியாயப்படுத்திக்கொள்வதிலும்,பிறரிடத்ததில் தங்களை நியாயப்படுத்திக கொள்வதிலுமே வாழ்க்கையின் பெரும்பான்மையைக் கழித்து விடுகின்றனர்.

எதற்கு இந்த நியாப்படுத்துதல்? நிதர்சனத்தில் எந்த ஒரு உயிருக்கும் தனி ப்பட்ட அடையாளமோ,நிலைத் தன்மையோ கிடையாது. எனவே நாம் தொடர்ந்து முரண்பட்ட நம்பிக்கைகளுக்குள் சிக்கிக் கொண்டே இருக்கிறோம். முரண்பட்ட நம்பிக்கை என்பதுவும் கூட கூட்டு வாழ்க்கையின் தேவைக்காக பின்னப்பட்ட தார்மீக விழுமியங்கள் என்னும் கற்பனை வலையின் நீட்சிதான். ஆனாலும் அத்தகைய முரண்பாடுகள் தனிநபர்கள் சமூக அங்கீகாரத்தைப் பெறத் தடையாக இருக்கின்றன. எனவே பழி அல்லது விமர்சனத்தைத் தவிர்க்கவும், உலகில் தங்களின் இடத்தைப் புரிந்து கொள்ளவும் நியாயப்படுத்திக்கொள்ளுதல் தேவைப்படுகின்றது.

உண்மையில், பரிணாமத்தில் தனிமனிதனுக்கான இடம் அல்லது அவனின் பங்கு என்பது புறக்கணிக்கத்தக்க காரணியே. ஆனாலும் தனிமனிதனாக நாம் எதையோ இங்கே நிருபிக்கத் துடித்துக்கொண்டேயிருக்கிறோம்.

அந்த உந்துதல்தான் ஒரு ஒட்டுமொத்த இனத்தையும்பரிணாமத்தின் அடுத்த தளத்திற்கு இழுத்துச்செல்லும் சக்கரம். இத்தகைய உளவியல் தேவைகளின் விளைவாகத் தான் நியாயப்படுத்தும் தன்மை நிலைத்திருக்க வேண்டும். சட்டங்களில் ஏற்படுத்தப்பட்ட ஓட்டைகளும் கூட ஒருவகையில் இதற்காத்தான்.நியாப்படுத்திக்கொள்ளாமல் வாழ்க்கை யில்லை. மனித வாழ்விலிருக்கும் எண்ணிலா முரண்பாடுகளில் இதுவும் ஒன்று.



21 ஆம் பக்கத் தொடர்ச்சி...

## காலத்திற்கு காலம் மாறுபடும்

கொழுநனைத் தொழாநின்று துயிலெழுவாள் 'பெய்" என்று சொல்ல மழை பெய்யும் என்று பரிமேலழகர் உரை சொல்கிறார்.

டாக்டர் ஆ.இராமகிருட்டினன் தன்னுடைய உரையிலே பிற தெய்வம் தொழ மாட்டாள்ளு தன் தெய்வமாகிய கணவனைத் துயில் எழுந்ததும் தொழுவாள். அவள் பெய் என்று சொல்ல மழை பெய்யும்ளு தெய்வமே அவள் ஏவல் கேட்கும் என்று எழுதியுள்ளார்.

கோ. பாரத்தசாரதி தன்னுடய உரையிலே வேறு தெய்வங்களைத் தொழாமல் தன் கணவனையே தொழுது துயிலெழும் பெண், வேண்டியபோது பெய்யும் மழைக்கு ஒப்பானவள்.

இவ்வாறான அர்த்தப் பொருத்தங்கள் பெண் கணவனைக் கடவுளாகக் கருத வேண்டும். அவர் காலடியை வணங்கி அடிமையாக வாழ வேண்டும் என்பதை வலியுறுத்துவதாக இருப்பதை உணருகின்றோம்.

பூமி தோன்றிய காலத்தில் இருந்து அதன் வளர்ச்சியும் கலாச்சாரங்களும் மாறு பட்டு கொண்டே வருகின்றன. கிறிஸ்துவுக்கு முன் இருந்த பண்பாட்டு கலாசார விழுமியுங்கள் 2024 ஆம் ஆண்டு நிச்சயமாக இல்லை. தாய்வழி சமுதாயம் தந்தைவழி சமுதாயமாக மாற்றப்பட்டது. வல்கா நதிக்கரையோர சமுதாயத்தை இன்று நினைத்துப் பார்க்கவே முடியாது. கணவன் குடும்பத்துக்கு வேண்டிய வருவாயைக் கொண்டு வருகின்ற போது மனைவி வீட்டில் இருந்து வீட்டைப் பொறுப்பெடுத்து வேலைகளைச் செய்த காலம் வள்ளுவர் காலப்பகுதியாக இருந்திருக்க வேண்டும்.

ஆனால் தற்காலத்தை நாம் சிந்தனையில் கொண்டு வரும்போது கணவனும் மனைவியும் ஒன்றாகவே காலையில் வேலைக்குப் போகின்றார்கள்ளு இருவரும் ஒன்றாகவே சேர்ந்து காலை உணவை தயாரிக்கின்றார்கள்ளு ஒன்றாகவே தம்முடைய அலுவலகத்துக்குச் செல்லுகின்றார்கள்ளு ஒன்றாகவே வீட்டுக்கு வருகின்றார்கள்ளு வேலை செய்த களைப்பிலே வருகின்ற வழியில் ஏதாவது கடையிலே தம்முடைய உணவை உண்டு விட்டு வீட்டுக்கு வந்து உறங்கிப் போகின்றார்கள். ஆனால் சிலர் வீட்டுக்கு வந்து வீட்டு வேலைகளை கவனித்துப் பின் உறங்கப் போவதும் இருக்கின்றது. ஆனால் காலையில் எழுந்தவுடன் தெய்வத்தை வணங்காது கணவனை வணங்கி எழுகின்ற பெண் என்பதை நாம் இக்காலத்தில் துளி கூட நினைத்துப் பார்க்க முடியாது. பரிமேலழகருடைய கருத்தை நாம் வாழுகின்ற காலத்துக்கு ஏற்பப் பொருத்திப் பார்க்க வேண்டியது அவசியம்

கணவன் வாக்கினைக் கடவுள் வாக்கினை



விட மேலானதாகக் கருதி அவனையே தொழுதிடும் மனைவி பெய் என ஆணையிட்டவுடன் அஞ்சி நடுங்கிப் பெய்கின்ற மழையைப் போலத்தன்னை அடிமையாக எண்ணிக்கொள்பவளாவாள் என முன்னாள் முதலமைச்சர் கருணாநிதி அவர்கள் உரை எழுதியுள்ளார். இதனையே சற்று மாற்றி காலையில் அனுதினம் கண்விழித்துக் கணவனைத் தொழுகின்ற பெண்ணானவள், தன்னுடைய வாழ்நாள் முழுவதும் அவனைத் தெய்வமாக நினைக்கின்றாள் என்ற ஒரு மனஉணர்வை அவனுக்கு ஏற்படுத்துகின்றாள். மூளைச் சலவை செய்கின்றாள் என்றே சொல்லவேண்டியுள்ளது. இவ்வாறான பெண் பெய் என்று சொல்ல மழை பெய்வது போலக் கணவனும் அவளுடைய காரியங்களுக்கு உடனடியாக செயற்படுவான். இச்செயலானது தன்னையும் தன் உறவினர்களையும் பேணுவதற்கும், அவளுடைய குடும்ப வாழ்க்கைக்கும் கணவனுடைய பங்களிப்பு உறுதுணையாகின்றது. இவ்வாறு இக்குறளை ஏற்றுக் கொள்வதே சாலச்சிறந்தது. அதுவே அவருடைய அடுத்து வரும் குறளாகிய

> **தற்காத்துத் தற்கொண்டான்**
> **பேணித் தகைசான்ற**
> **சொற்காத்துச் சோர்விலாள் பெண்**

என்னும் குறளுக்கும் வலிமை சேர்க்கும்.

காலைத் தொட்டு வணங்குதல் அடிமைத்தனம் என்று எடுத்துக் கொள்ள முடியாது. அது வணங்கப்படுபவர்களைப் பொறுத்தது. தெய்வீகத்தன்மை பொருந்தியவராக (மனஅளவில்) இருந்தால், அவருடைய பாதங்களின் மூலம் கடத்தப்படும் நற்கதிர் வீச்சுக்கள் வணங்குபவர்களுக்குப் பலனையே தருகின்றது. எனவே எதுவும் அவரவர் மனநிலைக்கும் சூழலுக்கும் ஏற்பவே பொருத்திப் பார்க்க வேண்டிய அவசியம் இருக்கின்றது.

எழுத்தாளன் எழுதுவது வாசகர்களுக்காக மட்டுமே. அதனால், இலக்கியங்களைக் காலமும், சூழலும், கலாசாரப் படிமங்களுமே தீர்மானிக்கும்.

08 ஆம் பக்கத் தொடர்ச்சி...

## ஐரோப்பாவில் 30 வருடங்களைக் கடந்து....

**கேள்வி: புலம்பெயர் நாடொன்றில் இருந்தபடி தமிழ் மொழியில் பத்திரிகை வெளியிடுவது தொடர்பில் குறிப்பிடுவதாயின்?**

பதில்: ஜேர்மனி தமிழ் மொழி பரவலாகப் பயன்படுத்தப்படக்கூடிய நாடல்ல. அதனால் வெற்றிமணி ஆரம்பிக்கும் போது அச்சகத்தில் பல சிரமங்களுக்கு முகம் கொடுக்க நேர்ந்தது. அங்குள்ள அச்சகங்களில் பணிபுபவர்கள் ஜேர்மனி மொழிப்பரீட்சயம் மாத்திரம் கொண்டவர்களாவர். அவர்களால் தமிழ்மொழி அச்சுப் பணிகளை மேற்கொள்வது சிரமமான காரியமாக இருந்தது. அப்படியிருந்தும் வெற்றிமணியை வெளியிட வேண்டும் என்பதில் நான் உறுதியாக செயற்பட்டேன்.

இதற்கு நான் பெற்றுக்கொண்ட பட்டபடிப்பு பெரிதும் உதவியது. களனி பல்கலைக்கழகத்தில் நுண்கலை துறையில் ஒவியம் தொடர்பில் கற்று பட்டம் பெற்ற எனக்கு இப் பத்திரிகை யை வெளியிட இக்கற்கை பெரிதும் உதவியது. 1994 காலப் பகுதியில் இப்போது போன்று கணினி வசதி இருக்கவில்லை. அச்சயம் எனது ஒவிய அறிவைப் பயன்படுத்தி பத்திரிகையை சீராகவும் ஒழுங்கமைப்புடனும் வெளிக்கொணர முடிந்தது

அதேநேரம் அன்றைய காலப்பகுதியில் ஜேர்மனியிலுள்ள அச்சகங்களில் ஜேர்மனி மொழி அல்லாத வேறுமொழியில் சஞ்சிகையொன்றை அச்சிட்டு வெளியிடுவது பாரிய சவாலுக்குரிய விடயமாக இருந்தது. வெற்றிமணி தமிழ் மொழியில் வெளியிடப்படும் பத்திரிகையாக இருந்ததால் அவர்கள் நீல நிறத்தில் சதுரப் பெட்டி போட்ட அட்டையை வழங்குவார்கள். அதில் தமிழ் மொழியில் எழுதி அதைப் பிரதிபண்ணி தலையங்கத்தைக் பெரிதாக்கி அதில் ஒட்டி அவர்களிடம் வழங்க வேண்டும். அதன் பின்னர் அவர்கள் அதனைப் படம் எடுத்து அதனைச் செய்வார்கள்.

அத்தோடு எந்தப் பக்கம் மேல் நோக்கி இருக்க வேண்டும்? எந்தப் பக்கம் கீழ் நோக்கி இருக்க வேண்டும் என்பதை சரியாகக் கண்டறிவதிலும் அவர்கள் சிரமங்களை எதிர்கொண்டார்கள். அச்சமயம் தான் தமிழ் எழுத்துக்கு மேல் குத்து இருந்தால் அது மேல் நோக்கி இருக்க வேண்டும் என்பதை அவர்கள் அறிந்து அதற்கு ஏற்ப செயற்பட்டார்கள். அவ்வாறான சிரமங்களுக்கு மத்தியில் வளர்ந்த வெற்றிமணி ஊடாக ஜேர்மனி மொழி மாத்திரம் தெரிந்த அவர்களுக்கு கடந்த 30 வருட காலப்பகுதியில் தமிழ் மொழிப் பரீட்சயம் ஏற்பட்டுள்ளது.

**கேள்வி: தமிழ் மொழி பரவலாகப் பயன்படுத்தப்படாத நாடொன்றில் இவ்வாறான பத்திரிகையை 30 வருடங்களாக தொடராக வெளியிடுவது என்பது இமாலயச் சாதனை தான். அது தொடர்பில் கூறுங்கள்?**

பதில்: வெற்றிமணி முழு வர்ணப் பதிப்பாகத் தொடராக வெளிவர ஜேர்மனியிலுள்ள வர்த்தக நிறுவனங்கள் முக்கிய




பங்காற்றுகின்றன. இலங்கையில் ஒரு காலத்தில் பத்திரிகைகள், சஞ்சிகைகள் வெளிவருவதற்கு பிரதேச மட்டத்திலுள்ள வாசிகசாலைகள், கிராம முன்னேற்ற சங்கங்கள் பெரிதும் உதவி வரக்கூடியனவாக இருந்துள்ளன. அதேபோன்று ஜேர்மனியில் வர்த்தக நிறுவனங்கள் உதவுகின்றன. குறிப்பாக பத்திரிகைகள், கலை நிகழ்ச்சிகளுக்கு அவர்கள் தங்களது ஒத்துழைப்பையும் ஆதரவையும் முன்முகத்துடன் நல்கி வருகிறார்கள். அவர்களது ஆதரவும் ஒத்துழைப்பும் என்றும் மறக்க முடியாதவையாகும்.

**நன்றி. தினகரன். 07.07.2024**









# மனச்சாட்சி

மாதவி – 02

எதுவரை போகுமோ அதுவரை போகலாம்.

ஒரு நண்பர் வீட்டில் சென்னையில் தங்கி இருந்தேன். புத்தம் புதிய கொண்டாட வாகனம். அவர் சென்னையில் வாகனம் ஓடுவது இல்லை.

காரணம் வாகன நெரிச்சலும், எந்த சட்டதிட்டங்களுக்கு ம் அங்கு இடம் இல்லை.

எதுவரை போகுமோ அதுவரை போகலாம். என்ற கண்ணதாசன் பாடல் வரிகளை சட்டமாக வைத்து ஓடவேண்டியதுதான்.

எனவே எல்லோரும் சென்னையில் வாகனம் ஓடமுடியாது. ஒரு சாரதியை வாடகைக்கு அமர்த்தி ஓடுவார்கள்.

அரை நாளுக்கு 500 ரூபாய்.

தி.நகருக்கு செல்லவேண்டும். முகர்ப்பே என்ற இடத்தில் இருந்து புறப்பட்டோம். தெருக்களின் இருமருங்கிலும் அரசியல் தலைவர்கள், வாரிசுகள் என்று பல சுவரொட்டிகள் ஒட்டப்பட்டு இருந்தது.



எனக்கும் வாய் சும்மா இருக்காமல் ஒட்டப்பட்ட சுவரொட்டிகளை பார்த்து தமிழ் நாட்டில் அரசியல் மாற்றம் வராதா என்றேன்.

எந்த தாமதமும் இன்றி பதில் சட்டென்று வந்தது, இல்லை சார்.

எனக்கு தெரிந்த சில தலைவர்களையும், நடிகர்களையும் குறிப்பிட்டு இவர்கள் வரச் சந்தர்ப்பம் உண்டா என்றேன்.

அதற்கும் சட்டென பதில் வந்தது. இல்லை சார்.

இப்ப இருக்கிறவங்க தான் வருவாங்கள் , தொடர்ந்தும் அவர்கள்தான் வருவாங்கள் என்றார்.

எப்படி நிச்சயமாக உங்களால் சொல்ல முடிகிறது என்றேன்.

அவங்களால் மட்டுமே அதிகம் வோட்டுக்கு காசு தரமுடியும். என்றார்.

சரி நல்லவங்க இருந்தால் அவர்களுக்கு சந்தர்ப்பம் கொடுக்கலாம் அல்லவா என்றேன்.

நம்மளுக்கு காசு வேண்டும் அல்வா என்றார்.

நான் சரி காசை வாங்கிக்கொண்டு நல்லவங்களுக்கு வோட்போடலாமே என்றேன்.




(மன்னிக்கவும் நான் சீமான் என்று நினைத்துப் பேசவில்லை. இயல்பாக வந்த கேள்விதான்)

குறுக்கால் ஒரு ஓட்டோ போக தறுதலைகள், ஒரு ஒழுங்கு இல்லை. எங்கேயும் இப்ப ஒழுங்கு இல்லை என்று திட்டிய படியே.

சார் காசு வாங்கிகிட்டு எப்படி சார் மற்றவங்களுக்கு போட முடியும், நல்லவங்கள் என்றாலும் கைநீட்டி காசு வாங்கிட்டு மற்றவங்களுக்கு போடுவது துரோகம் அல்லவா. மனச்சாட்சி விடாது சார் என்றார்.

குறுக்கால் போன ஓட்டோவை திட்டியவர், அது அவனை அல்ல என்னை திட்டியது போலவே இப்ப இருந்தது.

மனச்சாட்சிக்கும் பணத்திற்கும் நெருங்கிய உறவைப் புரிந்து கொண்டேன். இப்போ முதல் ஓட்டோ வண்டிக்காரன் குறுக்கே ஓடியதுபோல, என் வண்டிச்சாரதி ஓடினார்.

அவன் என் வண்டிச்சாரதியை இவன் முதல் திட்டியதுபோல் திட்டினார்.

நான் என் சாரதியின் முகத்தை பார்த்தேன்.

சார் இங்கு எதுவரை போகுமோ அது வரை போகலாம், என்றான்.

சேரவேண்டிய இடம் வந்துவிட்டேன் வாகனம் ஒன்றுதான், சாரதி நாளை வேறு ஒருவர் வருவார்.

வீடு வந்ததும் நடந்ததை எனக்கு வாகனம் தந்த நண்பரிடம் சொன்னேன்.

அவர் சொன்னார் நீங்கள் எங்கு வேண்டுமானாலும், எனது வாகன த்தை ஒரு சாரதியை போட்டு போங்கள் , அவங்கள் மூலை முடுக்கு எல்லாம் முட்டாமல் பத்திரமாய் கூட்டி போவாங்கள்.

ஆனால் அரசியல் மட்டும் பேசாதிங்க, அவங்கள் அடுத்த தலைமுறைக்கும் இவங்களே முடிவெடுத்தமாதிரி பேசுவாங்கள்.

சந்து பொந்து எல்லாம் முட்டாமல் ஓடினாலும் அரசியல் பேசினால் வெறி பிடித்து முட்டிவிடுவாங்கள் என்றார்.

மறுநாள் வாகனத்தில் ஏறினேன். வேறு ஒரு சாரதி வந்தார்.

தெருவில் இரு மருங்கும் எந்த சுவர் ஒட்டியும் என்கண்ணுக்கு படவில்லை. படவும் விடவில்லை.

என் நண்பனின் வாகனம். எனக்கும் மனச்சாட்சி உண்டல்லவா




M&M FAMILY
TOGETHER WE SHALL PREVAIL

வெற்றிமணியின் 30 ஆவது ஆண்டு நிறைவு இதழ் கண்டு மகிழ்கின்றோம்.

விளம்பரம் அறிமுகம் செய்யும். தரம் அதை நிலைபெறச் செய்யும்.

05 ஆம் பக்கத் தொடர்ச்சி...

## காதலிக்க நேரம் இல்லை காஞ்சனா

என் பணத்தை எனக்கே தராமல், மீண்டும் கடன் சுமைகளைத்தான் கொடுத்தார்கள். என் பெற்றோர்கூட அந்தச் சூழ்ச்சிகளை உணர வில்லை. நிம்மதியில்லாமல் இருந்தேன்.

'மனசுக்குள்ள இவ்வளவு வேதனைகளை வெச்சுக்கிட்டு எப்படி மகிழ்ச்சியா நடிச்சே? 'ன்னு பின்னாள்களில் பல ஜாம்பவான்கள் என்னிடம் கேட்டார்கள்.

நானே கஷ்டத்தைச் சொல்லி உதவி கேட்பேன் என்று எம்.ஜி.ஆர், சிவாஜி, நடிகர் சங்கத்தினர் உட்பட பலரும் எதிர்பார்த்தார்கள். அப்படிச் செய்திருந்தால் உடனே தீர்வும் கிடைத்திருக்கும். ஆனால், குடும்ப விஷயம் பொதுவெளிக்கு வருவதை நான் விரும்ப வில்லை. என்மேல் அன்புகொண்ட பிரபலங்கள் பலரும், 'நல்ல பையன் யாரையாச்சும் காதலிச்சுக் கல்யாணம் செய்துகிட்டு மகிழ்ச்சியா இரு' என்று சொன்னார்கள். அதற்கு என் மனம் பக்குவப்படவில்லை. ஒருகட்டத்தில் அதுதான் சரியான தீர்வு என உணரும்போது எனக்கு 40 வயதுக்கு மேல் ஆகிவிட்டது.

உரிய பருவத்தைத் தாண்டிக் கிடைக்கும் விஷயங்கள் பயன்தராது. குடும்பத்திலும் பிரச்னைகள் குறையவில்லை. வாழ்க்கையே வெறுத்துப்போய் வீட்டிலிருந்து வெளியேறி பெங்களூரில் தங்கை வீட்டுக்குச் சென்றேன். ஆன்மிகத்தில் ஆர்வம் அதிகமாகி, கோயில் கோயிலாகச் சுற்றினேன். மீண்டும் சென்னை திரும்பிய நிலையில், சட்டப் போராட்டத்தில் அதிக கவனம் செலுத்தினேன். வெற்றி கிடைத்தாலும் ஓரளவுக்குத்தான் சொத்துகள் கிடைத்தன. அதில் பல கோடி ரூபாய் சொத்துகளைத் திருப்பதி கோயிலுக்கு தானம் செய்துவிட்டோம்.

இப்போது என் தங்கையுடன் சென்னையில் வசிக்கிறேன். வீடும் என் அறையும்தான் எனக்கான உலகம். எனக்கு. இனி வெளியுலகத்தோடு ஒன்றி இருக்கவோ, வெளியிடங்களுக்குப் போகவோ விருப்பமில்லை.

ஆங்கிலம், இந்தி, பிரெஞ்ச், ரஷ்யன் உட்பட எட்டு மொழிகள் எனக்குத் தெரியும். எனவே, பல மொழி ஆன்மிகப் புத்தகங்கள் படி ப்பது, இசை கற்றுக்கொள்வது, உடற்பயிற்சி செய்வது என்று என் அன்றாடப் பணிகளுக்கு நேரம் பற்றாக்குறையாகவே இருக்கிறது. இதனால் தனிமை வாழ்க்கை நிறைவையும் நிம்மதியையும் தருகிறது!"

**நன்றி - விகடன்**

23 ஆம் பக்கத் தொடர்ச்சி...

## என் அன்பு மக்களே...

பொருத்தமான பெண் பாருங்கள் என்று சொல்லி அனுப்பி வைத்தேன்.

நல்லூர் மணி மண்டபத்தில் நடைபெற்ற கலை நிகழ்வு ஒன்றிக்காக எங்கள் பிள்ளைகளை நாங்கள் எங்கள் பேரூந்திலே அழைத்துச் சென்றோம்.

அங்கே தெருவில் நின்ற சில இளைஞர்கள் யார் இந்தப் பிள்ளைகள்?... எங்கிருந்து வருகின்றார்கள்?... என விசாரித்து சில தினங்களின் பின்பு எங்கள் தேவஸ்தானத்தில் நடைபெற்ற உற்சவத்திற்கு வருதை தந்தார்கள்.

எங்கள் அம்பாள் வெளிவீதி சுற்றி வர அம்பாளுக்கு பின்னால் தேவாரங்கள் இசைத்தபடி எங்கள் இல்லப் பிள்ளைகள் வந்தார்கள்.

நல்லூரில் இருந்து வந்த இளைஞர்கள் சிலர் எங்கள் பிள்ளைகளை சுற்றுச் சுற்றி படம் எடுத்துக் கொண்டிருந்தார்கள்.

நான் உடனே தெல்லிப்பழை பொலிசாருக்கு தகவல் சொல்ல அவர்கள் வந்து குறித்த இளைஞர்களை கடுமையாக எச்சரித்து தேவஸ்தானத்தில் இருந்து வெளியேற்றினார்கள்.

சில தினங்களின் பின் நான் துர்க்கா மணி மண்டபத்திற்கு சென்ற போது எனக்கு அருகில் வந்த சில இளைஞர்கள் கவனமாக இரு மிக விரைவில் வெட்டு வாங்க போறாய் என உரத்த குரலில் சொல்லி விட்டு சென்றுவிட்டார்கள்.

வீட்டில் ஒரு பெண் பிள்ளையை வளர்ப்பது எவ்வளவு கடினம் என்று பெண் பிள்ளைகளை பெற்ற பெற்றோர்களுக்கு நன்கு தெரியும்.

நாங்கள் 128 பெண் பிள்ளைகளை எங்கள் இல்லத்தில் வளர்த்து வருகின்றோம். 98 பிள்ளைகள் பாடசாலைக்கு போகின்றார்கள். அவர்களுக்கு தேவையான எல்லா வசதிகளையும் செய்து கொடுக்க வேண்டும்.

24 பிள்ளைகள் பல்கலைக்கழகத்தில் படிக்கின்றார்கள். வெளி மாவட்டத்தில் படிக்கின்ற பிள்ளைகளுக்கு உரிய நேரத்தில் பணம் அனுப்ப வேண்டும்.

வெளி மாவட்டம் சென்ற ஒவ்வொரு பிள்ளையும் நன்றாக இருக்கின்றதா என தினம் தினம் தொலைபேசியில் அழைத்து கேட்க வேண்டும்.

மேலதிக படிப்பிற்கு தேவையான பண உதவிகளை செய்ய வேண்டும். பல்கலைக்கழ நிகழ்வுகளுக்கு தேவையான உடைகளை வாங்கி கொடுக்க வேண்டும்.

பல்கலைக்கழ கல்வியை முடித்து விட்டு 5 பிள்ளைகள் எங்களுடன் இருக்கின்றார்கள்.

அவா்களுக்கு நல்ல வாழ்வு அமைத்து கொடுக்க நாங்கள் ஒவ்வொரு நாளும் அம்பாளை வேண்டி முயற்சிகளை செய்து வருகின்றோம்.

ஒவ்வொரு பிள்ளையின் நிறையினை அளந்து அவர்களுக்கு கொடுக்க வேண்டி சத்துணவுகள் மற்றும் சுகாதார நடைமுறைகள் குறித்து சுகாதார துறையினர் அறிவுரை சொல்லுவார்கள். அவற்றை குறைவின்றி செய்ய வேண்டும்.

ஒவ்வொரு பெண் பிள்ளையையும் வளர்ப்பதென்பது எவ்வளவு கஸ்ரம் என்று பலருக்கு தெரிவதில்லை.

எங்களுடன் இருந்து எங்கள் கஸ்ரங்களைப் பார்த்தால் நாங்கள் இவ்வளவு காரியங்களை செய்கின்றோமா என பலர் ஏங்குவார்கள்.

எங்கள் அம்பாளின் முகத்தை பார்த்து அவளின் அருகில் இருந்து எங்கள் அம்பாளே தங்கள் நிழல் என்று எங்களுடன் வாழுகின்ற எங்கள் பிள்ளைகளுக்கு நான் எனது உயிர் பிரியும் வரை என்னால் முடிந்ததை செய்வேன்.

அவளே தஞ்சம் என்றுதான் நான் தினமும் கை கூப்பி வணங்குகின்றேன். அவளே அனைத்தும் அறிவாள். அவள் கருணை தெய்வம். அவளை நம்புங்கள்.

**நன்றி**
**செஞ்சொற்செல்வர்,**
**தலைவர்,**
**துர்க்கா தேவி தேவஸ்தானம்,**
**தெல்லிப்பழை.**

15 ஆம் பக்கத் தொடர்ச்சி...

## டொனால்ட் ட்ரம்ப் மீது துப்பாக்கிச் சூடு:

ஆனால் இதுவரை ஜனாதிபதியாக தேர்ந்தெடுக்கப்படாதவர்கள் மீது

பல படுகொலை முயற்சிகள் பல நடந்துள்ளன. அவற்றுள் பல தோல்வியுற்றும் உள்ளன.

இத்தாக்குதல்கள் அனைத்தும் அமெரிக்க அரசாங்கத்தின் தலைமையின் கொள்கையை மாற்றுவதற்கான விருப்பத்தால் தூண்டப்பட்டவை.எவ்வாறாயினும், அத்தகைய தாக்குதல்கள் அனைத்தும் அரசியல் காரணங்களைக் கொண்டிருக்கவில்லை.

பல தாக்குதலாளிகள் சந்தேகத்திற்குரிய மன நோயாளி நிலைத்தன்மையைக் கொண்டிருந்தனர். மேலும் சிலர் சட்டப்பூர்வமாக மன நோயாளிகளாக மதிப்பிடப்பட்டனர். ஆயினும் பெரும்பாலான படுகொலைத் திட்டம் தீட்டியவர்கள் கைது செய்யப்பட்டு மரணதண்டனை அல்லது சிறைச்சாலையில் நீண்ட காலமாகத் தடுத்து வைக்கப்பட்டனர்.

### உளவுத்துறை கவலையீனம்:

தேர்தல் பிரச்சாரத்தில் டொனால்ட் ட்ரம்ப் மீது துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டது. இதைத்தொடர்ந்து அவர் மேடையில் இருந்து பாதுகாவலர்கள் புடை சூழ வெளியேறினார். இந்த தாக்குதலை அமெரிக்க நாட்டின் உளவுத்துறை உறுதி செய்துள்ளது.



குடியரசு கட்சியின் அதிபர் வேட்பாளரான முன்னாள் அதிபர் ட்ரம்ப், தனது ஆதரவாளர்கள் மத்தியில் உரையாற்றினார். அப்போது இந்த துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டது.

இதில ட்ரம்பின் வலது காது பகுதியில் காயம் ஏற்பட்டது. காதில் இருந்து ரத்தம் சொட்டிய நிலையில் தனது கையை உயர்த்தி காட்டினார். தொடர்ந்து பாதுகாவலர்கள் அவரை மேடையில் இருந்து பத்திரமாக அழைத்து சென்றனர்.

துப்பாக்கிச் சூடு நடத்தியவர் மீது போலீஸார் நடத்திய பதில் தாக்குதலில் அவர் உயிரிழந்தார். இதற்கான காரணம் குறித்து போலீஸார் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர். இந்த தாக்குதலுக்கு அமெரிக்க அதிபர் ஜோ பைடன், முன்னாள் அதிபர் பராக் ஒபாமா ஆகியோர் கண்டனம் தெரிவித்துள்ளனர்.




# ஷாருக் படத்தில் சமந்தா

சினிமாவில் பரபரவென முன்னுக்கு வந்து கொண்டிருந்த சமந்தா வாழ்க்கையை மை யோசிடிஸ் நோய் புரட்டி போட்டு விட்டது. இப்பொழுது சமந்தா உடல் நலம் ஓரளவுக்கு தேறினாலும், அவரை தங்களது படங்களில் நடிக்க வைக்க முன்னணி நட்சத்திர நடிகர்கள் யாரும் தயாராக இல்லை.

ஒரு பக்கம் சினிமாவில் நடிக்க புதிய வாய்ப்புகள் எதுவும் இல்லை. ஆனால், எப்படியாவது சினிமாவிலே இருக்க வேண்டும் என்ற நோக்கத்தோடுதான் திரைப்பட தயாரிப்பு நிறுவனம் ஒன்றையும் தொடங்கினார். அந்நிறுவனம் அறிவித்தபடி இன்னும் படப்பிடிப்பு எதுவும் தொடங்கப்படவில்லை.

இந்நிலையில்தான் பொலிவுட் சூப்பர் ஸ்டார் ஷாருக்கான், சமந்தாவை டிக் செய்திருக்கிறார் என்று பேச்சு அடிப்படுகிறது. இயக்குநர் ராஜ்குமார் ஹிரானியுடன் ஷாருக்கான் இணையவிருக்கும் புதிய படத்தில் சமந்தா நடிக்கப் போகிறாராம்.





# கைதி -2 இல் கமல்,சூர்யா,விஜய்?

லோகேஷ் தற்போது உருவாகியிருக்கும் கூலி படத்தின் படப்பிடிப்பை முடித்துவிட்டு கைதி 2 படத்தை தொடங்கவுள்ளதாக சொல்லப்படுகிறது. கைதி திரைப்படம் டுஊரு வாக உருவாகவுள்ள நிலையில் அதில் நடிக்க கமல்ஹாசன் சம்மதம் தெரிவித்துள்ளதாக சொல்லப்படுகிறது.

அதனால் அவர் கைதி 2 படத்தில் ஒரு சிறப்புத் தோற்றத்தில் நடிப்பார் என்று சொல்லப்படுகிறது. சூர்யாவும் ரோலக்ஸ் கதாப்பாத்திரத்தில் நடிக்கவுள்ளார் ஆனால் விஜய் லியோ கதாபாத்திரத்தில் நடிப்பாரா என்பது சந்தேகம்தான் என சொல்லப்படுகிறது. ஆனால் டுஊரு வில் இடம்பெற்ற மற்ற நடிகர்கள் அனைவரும் நடிப்பார்கள் என சொல்லப்படுகிறது.




# வன்முறைகள் நிறைந்த ராயன்

தனுஷின் 50 ஆவது படமான ராயன் படத்தை சன் பிக்சர்ஸ் நிறுவனம் தயாரிக்க, ஏ ஆர் ரஹ்மான் இசையமைக்கிறார். இந்த படத்தை தனுஷே இயக்கியுள்ளார். இந்த படத்தில் தனுஷோடு எஸ்ஜே சூர்யா, காளிதாஸ் ஜெயராம், துஷாரா விஜயன், சந்தீப் கிஷன் மற்றும் செல்வராகவன் உள்ளிட்டோர் நடித்துள்ளனர்.

படம் எதிர்வரும் 26 ஆம் திகதி வெளியாகின்றது . இந்நிலையில் இந்த படம் சமீபத்தில் தணிக்கை செய்யப்பட்டுள்ளது. படத்துக்கு ஏ சான்றிதழ் அளிக்கப்பட்டுள்ளது. படத்தில் வன்முறைக் காட்சிகள் அதிகமாக இருப்பதால் ஏ சான்றிதழ் வழங்கப்பட்டுள்ளது என சொல்லப்படுகிறது.

இந்நிலையில் தனுஷ், படத்தில் பொலிஸ் உளவாளியாக நடிப்பதாக சொல்லப்படுகிறது. அதனால் அவர் எதிர்கொள்ளும் பிரச்சினைகள்தான் ராயன் படத்தின் கதை என்கின்றார்.



# மீண்டும் மூக்குத்தி அம்மனாக நயன்

ஆர்.ஜே.பாலாஜியும், அவரது நண்பர் சரவணனும் இணைந்து இயக்கிய படம் "மூக்குத்தி அம்மன்" . நயன்தாரா மூக்குத்தி அம்மனாக நடித்திருந்தார். அவருடன் ஆர்ஜே பாலாஜி, ஊர்வசி, ஸ்மிருதி வெங்கட், அஜய் கோஷ் உள்பட பலர் நடித்திருந்தார்.

படம் நல்ல வரவேற்பை பெற்றது. இந்த படத்தின் இரண்டாம் பாகம் உருவாக இருப்பதாக கடந்த சில ஆண்டுகளாகவே ஆர்ஜே பாலாஜி கூறி வந்தார். ஆனால் நயன்தாரா மீண்டும் மூக்குத்தி அம்மனாக நடிக்க மறுப்பதாகவும், அதிக சம்பளம் கேட்பதாகவும், அதனால் திரிஷாவை நடிக்க வைக்க முயற்சித்து வருவதாகவும் தகவல்கள் வெளியாகின .

இந்த நிலையில் மூக்குத்தி அம்மன் இரண்டாம் பாகம் அதிகாரபூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இதில் நயன்தாரா மீண்டும் மூக்குத்தி அம்மனாக நடிப்பதும் உறுதியாகி உள்ளது. இதில் மூக்குத்தி அம்மன், அவரது பக்தை என இரு வேடங்களில் நயன்தாரா நடிப்பதாக தெரிகிறது.


தாயகத்தில்... வவுனியாவில் அமைந்துள்ள

"பண்டாரவன்னியன் புத்தகசாலையில்"

ஈழத்துப் புத்தகங்களை நீங்கள் பெறமுடியும்.

பண்டாரவன்னியன் புத்தகசாலை

தொடர்புகளுக்கு:
பண்டாரவன்னியன் புத்தகசாலை
வவுனியா, இலங்கை
+94772244616
youtube@akkakuruvi

இது வெற்றிமணியின் ஒரு இலவச விளம்பரம். நம் இளைஞர்கள் முயற்சிக்கு கைகொடுப்போம்!

விளம்பரம் அறிமுகம் செய்யும். தரம் அதை நிலைபெறச் செய்யும்.


Jasmine Silk House
ஆடைகளின் ராணி
பட்டுச் சேலைகளுக்கும், பஞ்சாபிகள்,
குருத்தாக்கள், பாட்டிசாறிகள்,
மற்றும் இமிரேசன் நகைகளுக்கும், நிறைவான
தெரிவுகளில் எம்மிடம் கிடைக்கும்
" என்றும் புதியது
ஆடைகள் என்றும் புதியது ! "
10.08.2024 சனிக்கிழமை
கேவலார் புனித மாதா கோவில்
திருவிழாவில் ஆலய
வளகத்தில் எமது மாபெரும்
மலிவு விற்பனை.
Tel: 02102 844744
HP: 0173 1937 325
"Jasmine Silk House" Fester Str.50- 40882 Ratingen


Kfz-Ingenieurbüro
NADANAM
Sachverständiger | Unfallgutachter
SIE HATTEN EINEN UNFALL? WIR HELFEN!
வாகன விபத்தா? உங்களில் தவறு இல்லையா?
கட்டணம் எதுவுமின்றி நாங்கள் உதவுகிறோம்!
விபத்தினால் ஏற்பட்ட சேதத்திற்கான தொகையை
மிகக் குறுகிய காலத்துக்குள் மதிப்பீடு செய்து தருவோம்.
உடனே எங்களை நாடுங்கள்.
B.Eng. Diesanth Nadanapatham
0175 5086977


PIRRUNTHA SILKS
Exclusive Indian Clothing & Jewelry
Stuttgart நகரில்...
Ludwig str.87a
70197
Stuttgart
தரம்மிக்க தங்க நகைகள்
நங்கையர் விரும்பும்
நவீன டிசைன்களில்
அமைந்த சேலைகள்
மற்றும் இமிடேசன்
நகைகள் அனைத்திற்கும்
நீண்ட கால நம்பிக்கை
மிக்க ஸ்தாபனம்
பிருந்தாஸ்
10.08.2024
சனிக்கிழமை கேவலார்
புனித மாதா கோவில்
திருவிழாவில் ஆலய
வளகத்தில் எமது மாபெரும்
மலிவு விற்பனை.
SALE
Tel: 0711 615 8976/ 0170 334 4059


KANTHAN
JEWELRY MARKT
காந்தன் தங்க நகை மாடம்
தரமான தங்க நகைகள்
புத்தம் புது டிசைன்களில்
எம்மிடம் கிடைக்கும்.
யேர்மனி டோட்மூண்ட் நகரில்
பொன் ஒளி வீசும்
காந்தன்
தங்க நகை
மாடம்
RHEINISCHE STR. 72 / 44137 / DORTMUND / GERMANY
0172 8684 203 / 0231 5898 7828 /


FRANKFURT நகரில் புதிய உதயம்
இலங்கை,
இந்தியாவிற்கான
விமான சிட்டைகள்
குறைந்தவிலையில் துரிதமாக
பெற்றுக்கொள்ள
TRUST TRAVELS Reisebüro
Mob: 017 645656520 Tel: 069 24 24 8079
Moselstr 33, 60329, Frankfurt am Main | Mail: trusttravelsffm@gmail.com
Inhaber : ஜெயக்குமார் வினோத்குமார்
TRUST TRAVELS
அத்துடன் துரித
பணப்பரிமாற்று
சேவையையும்
பெற்றுக்கொள்ளுங்கள்


Jaffna Super.markt
Jaffna Super markt
Wolbecker Str.16a 48155 Münster
4th ANNIVERSARY
WELCOME IM Jaffna SUPER.MARKT
எம்மிடம் நம்பி வாங்கோ!.. சந்தோசமாகப் போங்கோ!!..
Tel:0179 2310 560 Wolbecker Str.16a 48155 Münster (Eingang von Bremer Platz neben Parkhaus Ausgänge)